Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 14 திங்கட்கிழமை (29.06.2015) பக்கங்கள் 20 ஓசை – 272

## கூட்டமைப்பு கட்சிகளிடையே தொடர்ந்தும் கருத்து வேறுபாடு

### உண்மையை ஒப்புக்கொள்ளும் சுரேஷ்

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலுள்ள பங்காளிக்கட்சிகளிடையே பல்வேறு விடயங்களில் தொடர்ந்தும் கருத்து வேறுபாடுகள் உள்ளதாக கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சண்டேலீடர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் 'நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள கட்சிகளுக்கான ஆசன ஒதுக்கீடு குறித்து ஏற்கனவே பெரும்பாலும், இணக்கப்பாடு எட்டப்பட்டு விட்டது.

திருகோணமலை, யாழ்ப்பாணம், அம்பாறை ஆகிய மாவட்டங்களில், எந்தக் கட்சிக்கு எத்தனை வேட்பாளர்களுக்கு இடமளிப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே முடிவு செய்து விட்டது.

மட்டக்களப்பு மற்றும் வன்னி தேர்தல் மாவட்டங்களுக்கான ஆசனப்பகிர்வு குறித்து தீர்மானிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த இரண்டு மாவட்டங்களினதும் ஆசனப் பங்கீடு இறுதி செய்யப்பட்ட பின்னர், எந்தக் கட்சிக்கு எந்த மாவட்டத்தில் எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் வெளியிடப்படும்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனியான கூட்டணியாகவே போட்டியிடும். ஐ.தே.க.வுடனோ அல்லது வேறு எந்தக்கட்சியுடனோ கூட்டுச் சேராது.

19 ஆம் பக்கம் பார்க்க

## பரீட்சை நிலையங்களுக்கு பாதுகாப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நிலையங்கள் மற்றும் விடைத்தாள் திருத்தும் நிலையங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பை பலப்படுத்தவுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

உயர்தர பரீட்சை நிலையங்களின் அண்மிய பகுதிகளில், அரசியல் பேரணிகள், தேர்தல் பிரசார விநியோகங்கள் மற்றும் துண்டுப்பிரசுர விநியோகம் என்பன இடம்பெற அனுமதிக்கப்படக்கூடாதென அகில விராஜ் காரியவசம் தெரிவித்திருந்தார்.

உயர்தரப் பரீட்சை நிலையங்களுக்கருகே தேர்தல் பிரசார பேரணிகளில் ஈடுபடு

19 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் சீருடைகளை வைத்திருந்தவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

கைதடியில் புலிகளின் சீருடையை வைத்திருந்த இருவர் சாவகச்சேரி பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டதுடன் சீருடைகளும் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து கைதடி மேற்கில் புலிகளின் சீருடை, தொப்பிகள், அங்கி (கோல்சர்) என்பன மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் கைதடியைச் சேர்ந்த ஒரு இளைஞரும் வள்ளிபுனத்தைச் சேர்ந்த ஒருவரும் நேற்று கைது செய்யப்பட்டதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

இவை எவ்வாறு இவர்களுக்கு கிடைத்தன என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)


## தமிழர் பிரச்சினைக்கு புதிய அரசில் நிரந்தர தீர்வு

### தேர்தல் வாக்குறுதி அளித்தார் சம்பந்தன்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அமையவுள்ள புதிய அரசில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கிடைப்பது நிச்சயமென தனது தேர்தல் வாக்குறுதியை அறிவித்துள்ளார். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கைத் தீவில் நெடுங்காலமாக நிலவும் இனப்பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சு தற்போது இடம்பெற்று வருவதாகவும் சம்பந்தன் கூறினார்.



இதேவேளை தமிழருக்கான அரசியல் தீர்வு குறித்த பேச்சுக்களின்போது காணாமற்போனோர், மீள்குடியேற்றம், அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் தாம் பேசி வருவதாக அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரும் மைத்திரிபால சிறிசேனவே இலங்கையின் ஜனாதிபதியாக இருப்பார் என்று கூறியுள்ள சம்பந்தன், அவருடன் பேசப்பட்டுவரும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து நிச்சயம் நடவடிக்கை எடுப்பார் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

அத்துடன் மக்கள் தமது அனுபவம் மற்றும் அறிவின் அடிப்படையில் தமக்காக வேலை செய்யக்கூடிய பிரதிநிதியினை தெரிவு செய்ய வேண்டும்.

மக்களது பிரச்சினைகளை தீர்ப்பதாக இருந்தால் அவற்றை நிறைவேற்றக்கூடிய அதிகாரம் அவர்களிடம் இருக்கவேண்டும் அதைத்தான் நாங்கள் கேட்கின்றோம். இந்த சந்தர்ப்பத்தை நாங்கள் முழுமையாக பயன்படுத்த வேண்டும். எனவும் தெரிவித்தார்.

## தேர்தலில் போட்டியிட பி.ஜே.பி.யாக உருமாறும்

### பொதுபலசேனா

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில், பொது பலசேனா அமைப்பு, பொது ஜன பெரமுன ( பி.ஜே.பி) என்ற பெயரில் போட்டியிடவுள்ளதாக, அந்த அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் டிலந்த விதானகே தெரிவித்துள்ளார்.

பொருத்தமான வேட்பாளர்களிடம் இருந்து ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், விரைவில் தேர்தல் பரப்புரைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும், டிலந்த விதானகே குறிப்பிட்டுள்ளார்.

தாம் ஒன்றும் ஆச்சரியமான வெற்றியை எதிர்பார்க்கவில்லை என்றும் நியாயமான பிரதி

19 ஆம் பக்கம் பார்க்க

### தேர்தலில் போட்டியிடுவதா?

## யூலை 1 இல் முடிவை அறிவிக்கிறார் மகிந்த



(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான தனது அதிகாரபூர்வ நிலைப்பாட்டை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரும் யூலை முதலாம் ஆம் திகதி அறிவிக்கவுள்ளார் என மகிந்த ராஜபக்ஷவின் பேச்சாளர் ரொகான் வெலிவிட்ட தெரிவித்துள்ளார்.

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவாரா இல்லையா என்று மகிந்த ராஜபக்ஷ யூலை முதலாம் திகதி காலை 10 மணியளவில், மெதமுலானவில் வைத்து அறிவிப்பார் என்று அவர் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுவது தொடர்பாக பல்வேறு ஊடகங்களிலும், பல்வேறு அரசியல்வாதிகளும் வெளியிட்டு வரும் தகவல்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே, தாம் இந்த அறிவிப்பை வெளியிடுவதாகவும், ரொகான் வெலிவிட்ட தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் மற்றும் அரசியல்வாதிகளின் கருத்துகளுக்கு மகிந்த ராஜபக்சவின் பதில் யூலை முதலாம் திகதி வெளிவரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எனினும், மெதமுலானவில் தனது நிலைப்பாட்டை மகிந்த ராஜபக்ஷ செய்தியாளர் சந்திப்பிலா, அல்லது பொதுக்கூட்டத்திலா அறிவிப்பார் என்பதை, ரொகான் வெலிவிட்ட தெரிவிக்கவில்லை.

## பொதுத் தேர்தலின் பின் தேர்தல் திருத்தச் சட்டம்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தேர்தல் திருத்தச் சட்டம் முன்வைக்கப்படுமென பிரதமர் ரணில்விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

யட்டினுவரவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இதனைக் குறிப்

19 ஆம் பக்கம் பார்க்க

## கே.பி.யின் சொத்தை முடக்க விசாரணைகள் ஆரம்பம்

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனின் சொத்துக்களை முடக்குவதற்கு விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

குமரன் பத்மநாதன் நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த தடை கடந்த பெப்ரவரி மாதம் விதிக்கப்பட்டதாகவும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள்

19 ஆம் பக்கம் பார்க்க.

# குடிநீரில் கலந்துள்ள கழிவு ஒயிலை இனம்காண புதிய கருவி கண்டுபிடிப்பு

## - யாழ்.மருத்துவ சங்கம் தகவல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் குடிநீரில் கலந்துள்ள கழிவு ஒயில் மற்றும் மாசடைதலை கண்டு பிடிப்பதற்கான கருவி கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக மருத்துவ சங்கத்தினர் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ சங்கத்தினர் தெரிவித்தனர்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. அந்தச் சந்திப்பின் போதே, உயிரியல் மண் வடி கட்டி என்ற பெயரில் தயாரிக்கப்பட்டுள்ள கிறிஸ் மற்றும் கழிவு ஒயில்களை அகற்றுவதற்கான செயற்திறனை மேற்கொண்டுள்ளதாகவும், இந்த உபகரணத்தினை எதிர்வரும் இரண்டு மாதங்களில் பயன்படுத்துவதற்கான உத்தரவாதத்தினை அளித்துள்ளனர்.

குறித்த உயிரியல் மண் வடிகட்டி 100 வீதம் செயற்படுவதற்கான பரிசோதனைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த பரிசோதனையின் பின்னர் உயிரியல் மண்வடிகட்டியினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியும்.

இந்த பொறிமுறையினை மேம்படுத்த முயற்சித்து வருகின்றோம். அதனால், UV கதிர் வீச்சுக்களை பொறிமுறையில் இணைத்து, குடிநீர் மாசு படுதலை தடுக்க முயற்சித்து வருவதாகவும் தெரிவித்தனர்.

இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் யாழ்.மருத்துவ சங்கத்தின் தலைவர் முரளி வல்லிபுரநாதன் மற்றும், மருத்துவர் நோவில் விஜயசேகர சமூதாய மருத்துவதுறை தலைவர் எஸ் சுரேந்திரகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்தப் பொறிமுறை மருத்துவர் நொவில் விஜயசேகரவினால் வடிவமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (25)

## வீதி நெரிசலால் மக்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை வீதியில் நெருக்கடி மிகுந்த இடங்களில் பஸ் வண்டிகள் எல்லா இடங்களிலும் நிறுத்தி பயணிகளை ஏற்றிச் செல்வதால் அந்த வீதியில் நெருக்கடி ஏற்படுவதாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

மேலும் அந்த வண்டிகளின் சாரதிகள் நடத்துனர்கள் வைத்தியசாலையில் நோயாளரை பார்வையிட வீதியில் காத்து நிற்கும் உறவினர்கள், தெரிந்தவர்களைக் கண்டதும் வீதியில் வாகனத்தை நிறுத்தி குசலம் விசாரிப்பதையும் காண முடிகிறது. இதனால் பல்வேறு சிரமங்களை பொதுமக்கள் எதிர்கொள்கின்றனர். (23)

# வீதி விபத்து ஐவர் காயம்




(பருத்தித்துறை)

ஏ-9 வீதியில் பருத்தித்துறை வீதிச் சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 8 மணியளவில் ஏ-9 வீதி வழியாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று பருத்தித்துறை வீதிக்கு திரும்ப முற்பட்ட வேளை பின்புறமாக வந்த ஹன்ரர் வாகனம் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிளை மோதியதுடன் வீதிப் பெயர்ப்பலகையுடனும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கொக்குவிலைச் சேர்ந்த நற்குணராசா றமணன் (வயது - 35) என்பவர் படுகாயமடைந்ததுடன் ஹன்டர் வாகனத்தில் பயணித்த கச்சேரியடியைச் சேர்ந்த றீகன் (வயது - 24) நாவற்குழியைச் சேர்ந்த ஜெ.ஜெயகுராஜ் (வயது - 22), அரியாலையைச் சேர்ந்த எஸ்.விசாகன் (வயது - 20), புங்கன்குளந்தைச் சேர்ந்த எஸ்.நிலக்ஸன் (வயது - 20) ஆகியோர் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ,25,27)

# தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பதினோராம் வட்டாரத்தில் மாமரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தினைச் சேர்ந்த மார்க்கண்டு புஸ்பநாதன் (வயது - 58) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு வீட்டிற்கருகாமையிலுள்ள மாமரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுக் காலை 6 மணியளவில் கண்டு பிடிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலம் பிரேத பரிசோதனைக்காக நேற்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டது. (இ)



'மனிதம் பேணுவோம் பண்பாடு காப்போம்' எனும் தொனியில் பண்பாட்டு விழுமியங்களுடனான வாழ்வுக்கான பிரார்த்தனை நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் உரை நிகழ்த்துவதனையும், பிரார்த்தனையில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (படங்கள் ஆர்.இராஜகுமார்)

## மதுபோதையில் ஏறிய பயணி நடத்துனர் மீது தாக்குதல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் வரை சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தில் மதுபோதையில் ஏறிய பயணி ஒருவர் பேருந்து நடத்துனரை தாக்கிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாலை வேம்படிக்கும் குடாவத்தைக்கும் இடையே பேருந்தில் ஏறிய இப் பயணி தன்னிடம் கூடுதல் கட்டணம் அறவிடுவதாக கூறி பேருந்து நடத்துனரை தாக்கியதாக தெரியவருகிறது.

இத்தாக்குதல் சம்பவத்தில் முகத்திலும் கையிலும் காயங்களுக்குள்ளான பேருந்து நடத்துனர் பின்பு மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி பொலிஸாருக்கு நடத்துனர் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து சந்தேக நபரை பொலிஸார் தேடிவருகின்றனர். (18)

# நயினாதீவு கடற்போக்குவரத்து சீரின்மையால் பயணிகள் சிரமம்

(வேலணை)

வேலணை குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து நயினாதீவுக்கு கடற்போக்குவரத்தில் ஈடுபடும் பாதை பழுதடைந்ததில் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நயினை நாகபூஷணி அம்மன் வருடாந்த உற்சவம் ஆரம்பித்துள்ள நிலையில் இப்பாதையூடாக தமது வாகனங்கள் மற்றும் நிர்மாண வேலைகளுக்கான பொருட்களை ஏற்றிச் செல்லும் நடவடிக்கைகள் யாவும் இடைநடுவில் கைவிடப்பட்டிருப்பதாக நயினாதீவு செல்லும் அடியார்களும் பொதுமக்களும் கவலை வெளியிட்டுள்ளனர்.

உற்சவ காலத்தில் இத்தீவை வாகனங்களில் சென்று பார்வையிடுவதற்கு ஆர்வமாக உள்ளோம். இப்பாதைக்கான இயந்திரம் செயலிழந்ததில் குறிகாட்டுவான் இறங்கு துறையுடன் எமது பயணத்தை மட்டுப்படுத்த வேண்டி இருப்பதாக வாகன உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

வீதிகளை புனரமைப்பதற்கான கற்களையும் இப்பாதையூடாகவே எடுத்துச் செல்ல வேண்டி இருப்பதால் இங்குள்ள வீதிகளை செப்பனிடும் முயற்சிகளும் இடைநடுவில் கைவிடப்பட்டிருப்பதாக நாகபூஷணி அம்மன் அறங்காவலர் சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இங்குள்ள மக்களுக்கான அனைத்து கனரக பொருட்களையும் இப்பாதையை பயன்படுத்தியே எடுத்துச் செல்ல வேண்டி இருப்பதால் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் நிர்வகிக்கப்படும் இப்பாதையை அதிகாரிகள் முடிந்தவரை விரைவாக திருத்தி அமைத்து சேவையிலீடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் எஸ்.ஆர்.கனகநாயகம் சிறுவர் பூங்கா திறப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது ஜனாதிபதி சட்டத்தரணி கனகாஸ்வரன் நாடா வெட்டிப் பூங்காவைத் திறந்து வைப்பதையும், பூங்காவை சுற்றிப் பார்வையிடுவதையும், இல்ல சிறுவர்களின் விளையாட்டையும் காணலாம். (137)

# பின்தங்கிய மாணவர்களின் வளர்ச்சிக்கு சிவில்சமூகம் உதவ முன்வரவேண்டும்

(யாழ்.நிருபர்)

கிராமப்புறங்களில் பின்தங்கிய நிலையில் உள்ள சமூகத்தினரின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதற்கு வர்த்தகர்களும் கல்வியியலாளர்களும் முன்வரவேண்டும்.


இவ்வாறு ஓய்வுநிலை பிரதம அஞ்சல் அதிபர் சி.குமாரவேலு வேண்டுகோள் விடுத்துள்ளார். வட்டு கிழக்கு சித்தன்கேணி விநாயகர் கிராம நல்லொழுக்க சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கத்தின் 28 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டால்.

ஜனசக்தி சனசமூக நிலைய முன்றலில் சங்கத்தலைவி ம.றமணி தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இக்கூட்டத்தில் ஓய்வுநிலை அதிபர் குமாரவேலு தொடர்ந்து பேசுகையில்,

தரம் 1 இல் பாடசாலை செல்லும் மாணவன் தரம் 13 வரை மூன்று பொதுப்பரீட்சைகளைச் சந்திக்கிறான். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை உண்மையில் வருமானம் குறைந்த பிள்ளைகளின் கல்வித்தரத்தை உயர்த்தும் நோக்குடன் ஆரம்பிககப்பட்டது. ஆனால் அது இன்று பிரபல பாடசாலையில் தரம் 6 இற்கு அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சையாக மாறியுள்ளது. எனவே கிராமப் புறங்களில் பின்தங்கிய நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த பெற்றோர் தமது பிள்ளைகள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற ஊக்கம் எடுக்க வேண்டும். இப்பரீட்சையில் உங்கள் பிள்ளைகள் சித்திபெற்றால் உபகாரச் சம்பளம் பெற்று பிள்ளைகளைத் தொடர்ந்து சிரமமின்றி கற்பிக்க முடியும் எனவும் குறிப்பிட்டதோடு எங்கள் பின்தங்கிய பிர தேசத்துப்பிள்ளைகள் கல்வி கற்று முன்னேறினால் சமூகமும் நாடும் முன்னேறும்.

எனவே வர்த்தகர்கள் தனவந்தர்கள் கல்வியியலாளர்கள் பின்தங்கிய சமூகத்துப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவ முன்வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். (10)



நேற்று கொண்டாடப்பட்ட சமூக ஊடகதினத்தை முன்னீட்டு சமூக ஊடாக பயன்பாடு தொடர்பில் கருத்தரங்குகள் மாத்தறை மற்றும் யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்றன. யாழ்ப்பாணத்தில் ஆரியகுளம் புதிய உயர்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் இன்றைய உலகில் எவ்வாறு வெகுஜன ஊடகங்களை சாதகமாக பயன்படுத்துவது என்பது தொடர்பான விளக்கவுரைகள், கேள்விக்கான பதில் என்பன வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# இறுவட்டு வெளியீடு

(கரவெட்டி)

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய இறுதி உற்சவ நிகழ்வில் "கரவை புனிதரே போற்றி" எனும் தலைப்பில் இறுவட்டு வெளியீடு அண்மையில் இடம்பெற்றது.

நெல்லியடியைச் சேர்ந்த சுசைப்பிள்ளை அல்வின் தயாரித்தளித்த இந்த இறுவட்டின் முதற் பிரதியை யாழ்.குருமுதல்வர் அருட்திரு.ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் பெற்றுக் கொண்டார். (18)

# வீட்டுக்கடனுக்கான காசோலை வழங்கல்




(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதும் 50 ஆயிரம் வீடுகள் திட்டத்தின் கீழ் 125 பயனாளிகளுக்கு வீட்டுக் கடன் காசோலைகள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்.தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த வீட்டுத் திட்டமானது ஒரு இலட்சம் ரூபா பெறுமதியானதுடன் இது ஓர் இலகு கடன் திட்டமாகவும் காணப்படுவதாக வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

செய்யப்பட்ட 125 பயனாளிகளுக்கு முதற்கட்டமாக 20 ஆயிரம் ரூபாவுக்கான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் தொகுதிக்கு 300 வீடுகள் வீதம் மொத்தம் 3000 வீடுகளுக்கான கடன்கள் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் முன்னாள் மகளிர் விவகார பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் யாழ். மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் என பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# யாழில் இன்புளுவன்சா தாக்கம் நூறிற்கும் அதிகமானோர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இன்புளுவன்சா எச்1 என்1 வைரஸ் தொற்றுக்கு இதுவரை 100 இற்கு மேற்பட்டவர்கள் உள்ளாகியுள்ளனர் என யாழ்.போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் இந்த வைரஸ் தொற்று இருந்த போதும் கடந்த சில வாரங்களாகவே குறித்த வைரஸ தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இந்த வைரஸ் தாக்கத்திற்கு உள்ளான மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் குழந்தையை பிரசவித்த பின்னர் உயிரிழந்துள்ளார். எனினும் குழந்தை காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இன்புளுவன்சா வைரஸினால் பாதிக்கப்பட்டு பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். பலர் வீடு திரும்பியுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் இந்த தொற்று இருப்பது குறித்தும் புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

பிறபொருள் எதிரி கற்கை நெறிக்கான விரிவுரையாளர் பதவிக்கு கொழும்பு பல்கலைக் கழகத்தின் உயிரியல் இரசாயன மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரியல் தொழில் நுட்பவியல் நிறுவகம் விண்ணப்பம் கோரி அறிவித்துள்ளது.

விண்ணப்பப் படிவங்கள் தேவைப்படுவோர் அலுவலக நேரங்களில் இந்நிறுவனத்தின் சிரேஸ்ர உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, அடுத்தமாதம் 17 ஆம் திகதிக்கு முன் சிரேஸ்ர உதவிப்பதிவாளர், உயிரியல் இரசாயனம், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரியல், தொழில் நுட்பவியல் நிறுவகம், கொழும்பு பல்கலைக் கழகம், 90 குமாரதுங்க முனிதாச மாவத்தை, கொழும்பு - 3 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிதி ஒதுக்கப்பட்ட போதும் நயினையில் வீதி புனரமைப்பு ஸ்தம்பிதம்

## பொதுமக்கள் கவலை

(நயினாதீவு)

நயினாதீவு ஜே/34 கிராமசேவகர் பிரிவிலுள்ள விநாயகர் வீதியைப் புனரமைப்பதற்கான நிதி கிடைத்துள்ள போதிலும் இதற்கான வேலைகள் இன்னும் முன்னெடுக்கப்படவில்லையென அவ்வீதியை பயன்படுத்தும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நல்லாட்சி அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு ஒரு மில்லியன் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு இரண்டு மாதங்களாகியும் இவ்வீதி புனரமைப்புக்காக ஒரு தொகுதி கற்கள் மாத்திரம் கொண்டு வரப்பட்டு கொட்டப்பட்டுள்ள நிலையில் வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படாதுள்ளதாக அவ்வீதியை பயன்படுத்தும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நடந்தோ, சைக்கிளிலோ அன்றி வாகனங்கள் எதிலுமோ பயணிக்க முடியாத அளவுக்கு இவ் வீதி மோசமான நிலையில் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளதோடு இவ்வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்கள் எதிர் கொள்ளும் இடர்களை கவனத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அறிவிலியைப் பார்த்து உலகம் சிரிக்கிறது, அறிவாளி உலகைப் பார்த்து சிரிக்கிறான். -அன்புவழியூர்க்கவிராயர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## முழக்கம் மாறுவது எப்போது?

பொதுத் தேர்தல் அறிவித்தாகி விட்டது. வாக்குகள் தேடித் தமிழ் மக்களின் உடல் நக்க இனி வந்துவிடும் கோடி கோடியாய்ப் பொய்களின் நாக்குகள்.

சொன்ன பொய்கள் எதுவும் நடக்காமல் போனது பற்றி எந்த விளக்கமும் சொல்லத் தேவையில்லாமல், அதே பொய்களையே மீண்டும் அழுத்தமாய்ச் சொல்லி வாக்குகளை அள்ளியெடுக்கக் கூடிய விநோதம் உலகிலேயே இலங்கைத் தமிழ் மக்களிடம் தான் சாத்தியமாகும் போலும்!

அந்தளவுக்கு தமிழ் மக்கள் வெறுக்க வேண்டியதாக, நினைத்து நினைத்து அச்சப்பட வேண்டியதாக சிங்கள பௌத்த தேசியவாதப் பூதத்தைத் தீனி கொடுத்து வளர்த்துப் பேருருவாக்கிக் காட்டி, தமிழ்த் தேசியவாதப் பூதம் தன் தேர்தல் வெற்றிகளைச் சாதித்துக் கொள்கிறது.

தெற்கில் உள்ள இந்தப் பூச்சாண்டியைச் சொல்லிச் சொல்லியே வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களை எந்தக் கேள்விகளுமின்றி, அதே பழைய பொய்களுக்காக அதே பழைய உணர்ச்சிவசத்தோடு வாக்களிக்கும்படி செய்து தமிழ்த் தலைமைக் கதிரையைத் தொடர்ந்து பற்றி வருகிறது கூட்டமைப்பு.

தேர்தல் அறிவிப்பு வெளியான மறுநாளே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரின் முழக்கம் இப்படி வெளிப்படுகிறது: "இது தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் மிக மிக முக்கியமான தேர்தல்; சர்வதேசம் உன்னிப்பாக அவதானிக்கப் போகிறது".

அதாவது தமிழ் மக்கள் இம்முறையும் திரண்டு கூட்டமைப்புக்கே வாக்களிக்க வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் மக்கள் பாடு பெரும் ஆபத்தாகிவிடும் என்ற அதே தேர்தலுக்குத் தேர்தல் அச்சப்படுத்துகின்ற குடுகுடுப்பைதான் அது!

இதுதான் மிக மிக முக்கியமான தேர்தல் என்றால் இதற்கு முன் நடந்த தேர்தல்கள் எல்லாம் முக்கியமில்லாத தேர்தல்களா?

அந்தத் தேர்தல்களின் போதும் "முக்கியமான தேர்தல் இது, தமிழ் மக்கள் ஒற்றுமையாக எங்களுக்கு வாக்களிக்கா விட்டால் தொலைந்தார்கள்" என்று சொன்னதெல்லாம் பகிடிக்குச் சொன்னது; இதுதான் உண்மையாகவே முக்கியமான தேர்தல் என்றா தலைவர் சொல்கிறார்?

இதற்குப் பிறகு வரப்போகும் தேர்தல்கள் இதைவிட முக்கியம் குறைந்த தேர்தல்களாகத்தான் இருக்குமா? அல்லது இதையும் தாண்டி மிக மிக மிக முக்கியமான தேர்தல்களாக முக்கியம் கூடிக்கொண்டே போகுமா?

இந்தத் தேர்தலை விட முக்கியம் குறைந்ததாக இருந்த, இதற்கு முன்பு நடந்த அந்தத் தேர்தல்களை சர்வதேசம் அவ்வளவு உன்னிப்பாகக் கவனிக்காததால்தான் நமது பிரச்சினை தீரவில்லையா?

நடக்கப்போகும் இந்தப் பொதுத் தேர்தலிலாவது தமிழ் மக்களின் ஒற்றுமையை சர்வதேசம் உன்னிப்பாய்க் கவனித்துவிடுமா? அல்லது இதையடுத்து வரும் இன்னொரு தேர்தலிலும் சர்வதேசம் மிக மிக உன்னிப்பாகக் கவனிப்பதற்கு தமிழர் ஒற்றுமையைக் காட்டவேண்டி வருமா?

"தமிழர் ஒற்றுமையைக் காட்டுங்கள்... சர்வதேசம் உன்னிப்பாய்க் கவனிக்கிறது... உரிமைகளை வெல்ல கூட்டமைப்பு பிரதிநிதிகளை அதிகமாய் வெல்ல வையுங்கள்... இல்லாவிட்டால் தமிழர்கள் சிங்களவனுக்கு அடிமையாகிவிட வேண்டி வரும்...."

என்ற இந்தத் தேர்தல் வாய்பாட்டைச் சொல்வது இதுதான் கடைசி; இதற்குப்பிறகு வரப்போகும் தேர்தல்களிலும் இதே வாய்பாட்டைச் சொல்லிக்கொண்டு வர மாட்டோம் என்ற வாக்குறுதியையாவது இந்தமுறை தமிழ் மக்களுக்கு கூட்டமைப்பு தருமா?

\- ஆசிரியர்

# குற்றம் புரிந்தால் தண்டனை நிச்சயம்

## சுஜீவ சேனசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லிணக்க அடிப்படையில் அரசியலில் இணைந்திருந்தாலும் விடுதலைப்புலிகளின் முன்னாள் தலைவர்களும் அவர்கள் மேற்கொண்ட குற்றங்களுக்காக தண்டிக்கப்படுவார்கள் என்று சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு டிசம்பரில் யாழ்பபாணம் மிருசுவிலில் 8 பொதுமக்களை கொலை செய்த இராணுவ வீரருக்கு, கடந்த வாரம் கொழும்பு நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளிததது.

இதன் பின்னணியில் முன்னாள பிரதியமைச்சர் கருணா என்ற விநாயகமூர்த்தி முரளிதரன், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர பிள்ளையான் என்ற சிவநேசத்துரை சந்திரகாந்தன், விடுதலைப்புலிகளின் முன்னாள் சர்வதேச பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் ஆகியோர் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கே சுஜீவ சேனசிங்க தமது பதிலை வழங்யுள்ளார்.

குற்றங்கள் நிரூபிக்கப்படும் போது குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது சட்ட நியதியாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் சந்தேகத்துக்கு உரியவர்களுக்கு, நாட்டின் சமாதான அடிப்படையில் மனிதாபிமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தேர்தலின் பின்னரும் நல்லாட்சி அரசுதான்

## இது ரணிலின் நம்பிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று சகல கட்சிகளையும் இணைத்துக் கொண்டு, ஆட்சியமைக்கவுள்ளதாகத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொதுத் தேர்தலின் பின்டும் நல்லாட்சி தொடரும் என்றார்.

கம்பளை நகரில் பிரதமர் ரணில விக்கிரமசிங்கவுக்கு நேற்று முன்தினம் காலை அளிக்கப்பட்ட வரவேற்பைத் தொடர்ந்து கம்பளை அத்காலை பகுதியில் இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதமர் கலந்துகொண்டார்.

இதில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் கம்பளைத் தொகுதி அமைப்பாளர் சமந்த அருணகுமார, நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளர் ஆனந்த அளுத்கமகே உட்பட பலரும் கலந்துகொண்டனர். இங்கு பிரதமர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டு மக்கள் நல்லாட்சிக்கும் மாற்றத்திற்கும் ஜனவரி எட்டாம் திகதி தங்களது வாக்குரிமையை உபயோகித்தார்கள். எனவே ஜனவரி எட்டாம் திகதி ஏற்பட்ட மாற்றத்தைப் பாதுகாக்க வேண்டும். யுத்தத்தின் பின்பு தம்மை மட்டும் வளம்படுத்திக் கொண்டவரகளை மீண்டும் தோற்கடிக்க வேண்டும் எதிர்வரும் பொதுத் தேர்தல விருப்பு வாக்கு முறையில் நடைபெறும் இறுதித் தேர்தலாக அமையும். நாட்டு மக்களுக்கு நல்லாட்சி தேவைப்பட்டது. இந்த நல்லாட்சியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஏற்படுத்தினோம். அரசியல் கலாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தினோம்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகள் தனித் தனியே போட்டியிடவுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலான கட்சிகள் உட்பட பல கட்சிகள் தனித்துப் போட்டி யிடும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் போட்டியிடும். இக்கட்சி இரண்டாகப் பிளவுபட்டுக் களமிறங்கலாம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சிலர் மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் கொண்டுவர முயற்சிக்கின்றனர். அவர்கள் எதைச் செய்வார்கள் என்று எமக்குத் தெரியாது.

ஐக்கிய தேசியக் கட்சி பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று சகல கட்சிகளையும் இணைத்துக் கொண்டு ஆட்சியமைக்கும். எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறும். நாம் சகல கட்சிகளையும் இணைத்துக் கொண்டு தேசிய அரசாங்கம் என்ற அடிப்படையில் ஆட்சியை அமைப்போம். ஆனால் எதிர்க்கட்சியில் சிலர் இதனை விரும்ப வில்லை. ஆனால் நாம் சகல கட்சிகளையும இணைத்துக் கொள்வோம்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்க வேண்டும். நாட்டை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு செல்ல முடியாது.

புதிய ஆட்சியில் நல்லாட்சி தொடரும். அத்துடன் பத்து இலட்சம் தொழில் வாய்ப்புகளையும் உருவாக்குவோம் என்றார்.

# பிரதமர் வேட்பாளர் யார்? முடிவு இன்னும் இல்லை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் யார் என்பதனை விரைவில் அறிவிப்போம் என தெரிவித்துள்ள அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா எப்படியும் மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவது உறுதியாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் கட்சியின் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.எதிர்வரும் பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று மைத்திரி-மகிந்த அரசாங்கத்தை அமைக்கும் நோக்கத்துடனேயே நாம் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம். இதன்படி அமைக்கப்பட்டுள்ள குழு வெற்றிகரமாக தமது செயற்பாடுகளை முன்னெ டுக்கின்றனர்.

எவ்வாறாயினும் கட்சியின் பிரதமர் வேட்பாளர் யார் என்பதனை பெறுத்தமான நேரத்தில் நாம் அறிவிப்போம் ஆனால் மகந்த போட்டியிடுவது உறுதியாகும். தற்போது வேட்பாளர் பட்டியலை தயாரிக்கும் பணிக இடம்பெற்று வருகின்றன. அதன் பின்னர் நாம் அது தொடர்பான தகவல்களை வெளியிடுவோம். என அவர் தெரிவித்துள்ளார்.

# சுசில் மகிந்த பக்கம் சு.கட்சிக்குள் பிளவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பாரிய பிளவு ஒன்று எதிர்பார்க்கப்படுவதாக தெற்கில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த,முன்னாள் ஜனாதிபதி மகந்த ராஜபக்ஷவின் அணியில் இணைந்து கொள்ளப் போவதாக தெரிவிக்கபட்டுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னதாகவே சுசில் பிரேமஜயந்த வெளிநாடு ஒன்றுக்கு சென்று விட்டார். அவர் நாளை நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இகன்பின்னர் உடனமயாகவே அவர் மகிந்த ராஜபக்ஷவுக்கான பிரசாரங்களில் ஈடுபடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகந்த ராஜபக்ஷவுக்கு பொதுத் தேர்தலில் போட்டியிட வேட்பாளர் நிலையை வழங்குவதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை பின்னடிப்பதே தற்போதையு நிலைமைக்கான காரணமாக அமைந்துள்ளது.

இதேவேளை மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இணக்கத்தை ஏற்படுத்த அமைக்கப்பட்டுள்ள 6 பேர் குழு நாளை மீண்டும் ஒருமுறை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்கவள்ளகு.

# சின்னங்கள்ள மாற்ற அனுமதி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள அரசியல் கட்சிகள் விரும்பினால் தமது சின்னங்களை மாற்றிக் கொள்ளலாம்.

அதற்கான சந்தர்ப்பம் வ்ழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் கூட்டணி அமைக்கப் போகும் கட்சிகள் அதுபற்றி தமக்கு முறையாக, முன்கூட்டியே அறிவிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**ரணில் – மங்கள – சந்திரிகா ஆகியோர் சமாதானத்தை அடைவதற்காக தவறான ஆட்களுடன் பேச்சுக்களை நடத்தி போராடினார்கள். அவர்கள் புலிகள் அல்லாத தமிழ் குழுக்களுடன் ஒரு அரசியல் திட்டத்தை செயற்படுத்தி புலிகளை அரசியல் – இராணுவம் ஆகிய இரண்டு கத்திகளுக்கு இடையில் அகப்பட வைத்திருக்க வேண்டும். 13ஆவது திருத்தத்துக்குள் அவர்கள் ஒரு இடைக்கால நிருவாகத்தை நியமித்து, முன்பு ஐ.தே.க. வுடன் செயற்பட்டவர்கள் மற்றும் சந்திரிகா ஸ்ரீலங்கா மக்கள் கட்சியில் இருந்த காலந்தொட்டே அவருக்கு அறிமுகமானவர்கள் ஆகியோர் மூலம் புலிகளுக்கு எதிரான ஒரு முற்போக்கு குழுவினரின் கூட்டணியை நிறுவியிருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை.**

**தங்கள் பங்குக்கு ராஜபக்ஷ அரசாங்கம், ஜனாதிபதி புட்டின் செச்சினியாவில் றம்சான் காடிரோ மூலமாக வெற்றிகரமாக செயற்படுத்திய திட்டத்தைப் போன்று 2009இல் யுத்தத்தில் வெற்றியடைந்ததும் மற்றும் ரி.என்.ஏ மீண்டும் பலம் பெறுவதற்குள் தங்கள் கூட்டணியைச்சேர்ந்த டக்ளஸ் தேவானந்தாவிடம் அதிகாரத்தை வழங்கியிருக்கலாம். மாறாக அது (உயர் – பாதுகாப்பு) அவிவிருத்தி உத்தி ஒன்றை தேர்வு செய்தது, அதில் ஒரு அரசியல் கூறு அதாவது, வடக்கு மற்றும் கிழக்கில் ஸ்ரீ.ல.சு.க வை மீண்டும் கட்டியெழுப்பும் ஒரு வீண் முயற்சி இருந்தது.**







# சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் தவறு விடும் இலங்கை அரசுகள்

**கலாநிதி தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து**


இலங்கை அதன் புலம்பெயர்ந்தவர்களை நிச்சயம் வரவேற்க வேண்டும். நாங்கள் ஒரு நாடு என்கிற வகையிலும் அதேபோல இலங்கை அரசாங்கம் என்கிற வகையிலும் இது உண்மையான ஒன்று. ஆனால் புலம்பெயர்ந்தவர்கள் ஒரே சீரான ஒரு அமைப்பு அல்ல. இங்கு நான் புலம்பெயர்ந்த சிங்களவர்கள் நல்லவர்கள் என்றும் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்கள் கெட்டவர்கள் என்று அர்த்தம் கற்பிக்கவில்லை. நான் கருதுவது என்னவென்றால் தமிழ் மற்றும் சிங்கள புலம்பெயர்ந்தவர்கள் ஆகிய இரு பகுதியினரிலும் மிதவாதிகள் உள்ளதைப் போல தீவிரவாதிகளும் இருக்கிறார்கள் என்பதைத்தான். நாடும் மற்றும் அரசாங்கமும் தனது கதவுகளை விரியத் திறந்து சிவப்பு கம்பளம் விரிக்க வேண்டியது சிங்கள மற்றும் தமிழ் புலம்பெயர்ந்தவர்களிடையே உள்ள மிதவாதிகள் மற்றும் அறிவொளி மிக்க நீரோட்டங்களுக்கே.

ரணில் - மங்கள - சந்திரிகா மாதிரி நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்தல் என்பதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் அவர்களது வெற்றிபெறாத 1995 - 2005 வரையான தசாப்த கால படுமோசமான அமைதி முயற்சிகளிலிருந்து அவர்கள் எதுவித பாடத்தையும் கற்கவில்லை. இது மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்க நிருவாகம் யுத்தத்தின் பின்னான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்கம் என்பனவற்றை சரியாகச் செய்தது என்று சொல்ல முயற்சிக்கவில்லை.

ரணில் - மங்கள - சந்திரிகா மூவரணி செய்த மாபெரும் தவறு, புலிகளை மொத்தமாக செயலிழக்க வைக்காமல் மிகவும் அடிப்படையாக பிரபாகரனை நீக்காமல் சமாதானம் வந்துவிடும் என்று நினைத்ததுதான். மிகவும் குறைந்த தீவிரம் இருந்த ஜே.வி.பி. கிளர்ச்சி நடந்த 1986 - 1989இல் விஜேவீரவை அழிக்காமல் மற்றும் ஜேவிபியை தோற்கடிக்காமல் சமாதான்த்தை அடைய முடியவில்லை என்பது ஒரு எடுத்துக்காட்டு, மிகவும் அதிகம் ஆக்ரோசமான சக்தி வாய்ந்த எல்.ரீ.ரீ.ஈ விடயத்தில் அது வித்தியாசமாக இருக்கும் என்று கருதியதுக்கு உண்மையில் மிகவும் உயர்மட்ட மழுங்கல் புத்திதான் காரணம்.

தனது பங்குக்கு ராஜபக்ஷ நிருவாகம் அதற்கு எதிரான தவறைச் செய்தது. இராணுவ வெற்றி சாத்தியமானதும் மற்றும் அவசியமானதும் என்கிற தனது முன்னோடிகள் உணரத் தவறிய உண்மையை உணர்ந்து செயலாற்றிய ராஜபக்ஷ நிருவாகம், அவசியமான நிபந்தனைகளே போதுமான நிபந்தனைகள் எனக் கருதி முன்னவர்கள் செய்ததுக்கு எதிர்மாறான தவறைச் செய்துவிட்டது. யுத்தத்தின் வெற்றிகரமான முடிவுதான் நீடித்த சமாதானத்துக்கு போதுமான நிபந்தனை என்று அது நினைத்தது.

சமாதானத்தைக்கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் அவசியம் மற்றும் இந்த சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்பதுக்குத் தேவையான பொருட்களை புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி என்பன மட்டுமன்றி, புனர்வாழ்வளித்தல் மற்றும் கண்ணி வெடிகளை அகற்றுதல் என்பன மட்டுமின்றி, அதேசமயம் ஒரு அரசியல் பேச்சு வார்த்தையும் மிகவும் அவசியம் என்பதை அது உணரத் தவறிவிட்டது. போருக்குப் பிந்தைய நடவடிக்கைகள் மற்றும் நிலையான நீடித்த சமாதானம் என்பனவற்றுக்கான முன் நிபந்தனை ஒரு அரசியல் பேச்சு வார்த்தை என்பதை அது புரிந்து கொள்ளத் தவறிவிட்டது.



**ராஜபக்ஷ நிருவாகம், யுத்தத்தின் வெற்றிகரமான முடிவுதான் நீடித்த சமாதானத்துக்கு போதுமான நிபந்தனை என்று நினைத்தது. சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் அவசியம் மற்றும் இந்த சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்பதுக்கு தேவையான பொருட்களை புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி என்பன மட்டுமன்றி, புனர்வாழ்வளித்தல் மற்றும் கண்ணிவெடிகளை அகற்றுதல் என்பன மட்டுமின்றி, அதேசமயம் ஒரு அரசியல் பேச்சு வார்த்தையும் மிகவும் அவசியம் என்பதை அது உணரத் தவறிவிட்டது.**

ரணில் - மங்கள - சந்திரிகா ஆகியோர் சமாதானத்தை அடைவதற்காக தவறான ஆட்களுடன் பேச்சுக்களை நடத்தி போராடினார்கள். அவர்கள் புலிகள் அல்லாத தமிழ் குழுக்களுடன் ஒரு அரசியல் திட்டத்தை செயற்படுத்தி புலிகளை அரசியல் - இரா்ணுவம் ஆகிய இரண்டு கத்திகளுக்கு இடை, யில் அகப்பட வைத்திருக்க வேண்டும், ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. காலத்தையும் அரசியல் முதலையும் வீணடித்த 1995 மற்றும் 1997 பிராந்திய ஒன்றியங்கள் என்கிறபொதி, லியாம் பொக்ஸ் உடன்படிக்கை, யுத்த நிறுத்த ஒப்பந்தம், சொல்ஹைம் தியானம், சுனாமிக்குப் பின்னான கூட்டு உடன்படிக்கை என்பனவற்றுக்குப் பதிலாக அவர்கள் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தியிருக்கலாம். 13ஆவது திருத்தத்துக்குள் அவர்கள் ஒரு இடைக்கால நிருவாகத்தை நியமித்து, முன்பு ஐ.தே.க. வுடன் செயற்பட்டவர்கள் மற்றும் சந்திரிகா ஸ்ரீலங்கா மக்கள் கட்சியில் இருந்த காலந்தொட்டே அவ்ருக்கு அறிமுகமானவர்கள் ஆகியோர் மூலம் புலிகளுக்கு எதிரான ஒரு முற்போக்கு குழுவினரின் கூட்டணியை நிறுவியிருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை.

தங்கள் பங்குக்கு ராஜபக்ஷ அரசாங்கம், ஜனாதிபதி புட்டின் செச்சினியாவில் றம்சான் காடிரோ மூலமாக வெற்றிகரமாக செயற்படுத்திய திட்டத்தைப் போன்று 2009இல் யுத்தத்தில் வெற்றியடைந்ததும் மற்றும் ரி.என்.ஏ மீண்டும் பலம் பெறுவதற்குள் தங்கள் கூட்டணியை சேர்ந்த டக்ளஸ் தேவானந்தாவிடம் அதிகாரத்தை வழங்கியிருக்கலாம். மாறாக அது (உயர் - பாதுகாப்பு) அவிவிருத்தி உத்தி ஒன்றை தேர்வு செய்தது, அதில் ஒரு அரசியல் கூறு அதாவது, வடக்கு மற்றும் கிழக்கில் ஸ்ரீ.ல.சு.க வை மீண்டும் கட்டியெழுப்பும் ஒரு வீண் முயற்சி இருந்தது.

சுவாரஸ்யமான முறையில் சந்திரிகா மற்றும் மகிந்த ராஜபக்ஷ நிருவாகங்கள் ஒரே விதமான தெரிவை மேற்கொண்டு ஒரே விதமான தவறைச் செய்தன. அவர்கள் இருவரிடத்திலும் புலிகளுக்கு விரோதமான, பிரிவினை வாதத்துக்கு எதிரான தமிழ் பங்காளி ஒருவர் இருந்தார், அதை அவர்கள் பிரேமதாஸ - ரஞ்சன் விஜேரட்ன காலத்திலிருந்தே பரம்பரைச் சொத்தாகப் பெற்றிருந்தார்கள், ஆனால் அவர்கள் தங்கள் விளையாட்டில் அதைப் பயன் படுத்தத் தவறி விட்டார்கள். புலிகள் அவரைக் கொல்ல முயன்று மாறாக அவரது ஒரு கண்ணைக் குருடாக்கிய பிறகும் சந்திரிகா புலிகளுடன் (நோர்வே மூலமாக) பேசுவதை தேர்வு செய்தார்.

மகிந்த ராஜபக்ஷ நிருவாகம் புலிகளைத் தோற்கடித்தது, ஆனால் அப்படிச் செய்திருந்த போதும் யுத்தத்துக்கு பின்னான கட்டத்தில், வடக்கில் அடையாளப் படுத்தத்தக்க தமிழ் பங்காளர் மற்றும் மூலோபாயமான கூட்டணி என்பன இல்லாததால் அரசியல் ரீதியாகச் செயற்படுவதற்கு போராட வேண்டியிருந்தது. அத்தகைய தவறை செய்திருந்தும், ரி.என்.ஏ உடனான பேச்சு வார்த்தைகளை முறிவடையச் செய்து அதனை இடை நிறுத்தி இயல்பு நிலைத் தெரிவாக இருந்த அந்த ஒன்றையும் தவற விட அனுமதித்ததின் மூலம் ராஜபக்ஷ நிருவாகம் அதனை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கியது.

ரணில் மற்றும் சந்திரிகா மற்றும் அவர், முன்பு எங்கு விட்டார்களோ அந்த இடத்திலிருந்து மங்கள சமரவீர ஆரம்பிக்கிறார். மங்கள சொல்வதின் படி ஜி.ரி.எப் மிதவாதமான ஒன்று ஏன்றால், தீவிரவாதம் என்பதைப் பற்றிய அவரது கருத்து என்னவென்று எங்களால் கற்பனை செய்ய முடியும்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# மைத்திரியுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா ஆவல்





(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்படப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்ற ஜனாதிபதியின் உறுதிமொழிக்கு அமையவே, இந்த அறிவிப்பை வெளியிடுவதாக அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

2014ஆம் ஆண்டுக்கான அமெரிக்காவின் மனித உரிமைகள் அறிக்கையின் பின்னர் மனித உரிமைகள் விடயத்தில் உரிய கவனம் செலுத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால உறுதியளித்திருந்தார்.

இந்நிலையில் நல்லாட்சியை முன்னெடுக்கவும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவும் அமெரிக்கா, மைத்திரிபாலவுடன் இணைந்து செயற்படும் என்று தூதரகத்தின் பேச்சாளர் ஜே.சு.ஆ.ஷேன் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் கண்காணிப்பு பணிக்கு வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள்

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் போது கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கென வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறைந்தது 50 வெளிநாட்டு கண்காணிப்பரளர்களையாவது இம்முறை தேர்தலுக்காக அழைக்க எதிர்பார்த்துள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

தாய்லாந்தின் சுதந்திரமான தேர்தலுக்கான ஆசிய வலையமைப்பு, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய அமைப்புக்களில் இருந்து தேர்தல் கண்காணிப்பாளர்களை அழைக்கவுள்ளதாக, பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய ஜனநாயக நிறுவனம் மற்றும் வேறு சில அமெரிக்க நிறுவனங்களுடனும் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

# மகிந்தவையும் இணைத்து ஆட்சி அமைப்போம்

## எஸ். பி. சொல்கிறார்

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் நாம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் இணைத்துக் கொண்டு ஓரணியில் செயற்பட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை உருவாக்குவோம் என அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் குறித்து தமிழ் ஊடகம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

விமல்வீரவன்ச, உதயகம்மன்பில போன்றோரே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தி தமது அரசியல் சுயலாபங்களை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கின்றனர். மாறாக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எவரும் கட்சியைப் பிளவுபடுத்த விரும்பவில்லை.

மகிந்தவை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரதம வேட்பாளராக களம் இறக்கும் நோக்கமோ, தீர்மானமோ கிடையாது. விரும்பினால் சாதாரண வேட்பாளராக போட்டியிடலாம்.

கடந்த காலங்களில் மகிந்த அணி, மைத்திரி அணி என பரவலாகப்பேசப்பட்டு வந்தது.

ஆனால், அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து ஓரணியில் செயற்படுவதற்கான வேலைத் திட்டங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்டு வருகின்றார்

சிங்கள சிறு கட்சிகள் மற்றும் தமிழ் முஸ்லிம் கட்சிகள் இணைந்து மைத்திரியை வெற்றிபெறச் செய்தார்கள். ஆனால் இவர்கள் மகிந்த தேர்தலில் போட்டியிடுவதை விரும்பவில்லை.

ஆகையினாலேயே இவருக்குப் பிரதமர் வேட்பாளராக போடடியிட கட்சிகள் வாய்ப்பளிக்க மறுத்துள்ளன.

இதேவேளை இம்முறை எமது முன்னணியில் மேலும் சில புதிய கட்சிகளும் ஒன்றிணையவுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எதிர்வரும் தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அத்தோடு மகிந்த எதிர்வரும் தேர்தலில் தனித்துப்போட்டியிட மாட்டார் என்றே நாம் நம்புகின்றோம் என அவர், மேலும் குறிப்பிட்டார்.

# அனைவரையும் இணைத்து ஆட்சி அமைப்போம்

(கொழும்பு)

மூன்றில் இரண்டு அதிகாரம் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 18ஆம் திகதி உருவாக்கப்படும் என வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கும்புருபிட்டிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் ஐக்கிய தேசிய கட்சி என்ற ரீதியில் தனியாகப் போட்டியிட்டு நாடாளுமன்றத்தினுள் அதிக ஆசனங்களை பெற்றுக் கொண்டு தனியாக ஆட்சி செய்ய முடியும்.

எனினும் இந்த நாட்டிற்கு ஒற்றுமையான அரசியல் அவசியம் என்பதனால் எங்கள் வெற்றிக்கு பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட அனைத்து குழுக்களையும் இணைத்துக்கொண்டு மூன்றில் இரண்டு அதிகாரம் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைப்போம்.

அனைவரையும் இணைத்துக் கொள்ள ஆயத்தம் என்ற போதிலும், மோசடியில் ஈடுபட்ட அபயராம தரப்பினரை ஒரு போதும் இணைத்துக்கொள்வதில்லை.

# ஜெனிவா நோக்கி இராஜதந்திரிகள் குழு விரைவு

ஜெனிவா மனித உரிமைச் சபையில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் விசாரணைகளை அரசாங்கம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

படையினர் மீதும் இலங்கை அரசாங்கத்தின் மீதும் சேறுபூசும் நடவடிக்கைகளில் சில பொது அமைப்புகள் ஈடுபடுவதாகவும் உள்ளக விசாரணை பொறிமுறைகள் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஜெனிவா மனித உரிமைச் சபையின் விசாரணைகள் அவசியமற்றவை என்றும் வெளியுறவு அமைச்சின் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதிகளின் உறவினர்கள் வழங்கி வரும் சாட்சியங்கள் உண்மைக்குப் புறம்பானவை என்றும் அது தொடர்பாக ஜெனிவா மனித உரிமைச் சபைக்கு அரசாங்கம் அதிகாரபூர்வமாக விளக்கமளிக்கும் எனவும் அந்த அதிகாரி கூறினார்.

இதேவேளை ஜெனிவா மனித உரிமைச் சபைக்கு விளக்கமளிக்க அரசாங்கத்தின் சார்பில் உயர் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று விரைவில் பயணம் செய்யவுள்ளது என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவுக்கு அமைவாக வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர நடவடிக்கை எடுத்து வருவதாகவும் வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

# இடமாற்றங்கள் அனைத்தும் இரத்து

எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதியில் இருந்து நாடாளுமன்றத் தேர்தல் நிறைவடையும் வரை அரச சேவை மற்றும் பொலிஸ் சேவையில் சகல இடமாற்றங்களும் தடை செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சநதிப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும், வாக்கு எண்ணும் மையங்களாக இம்முறை பாடசாலைகள் [illegible]தில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதை அடுத்து மத்திய வங்கி ஆளுநர் தொடர்பிலான விசாரணை அறிக்கை மற்றும் நிதியமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்படவிருந்த நம்பிக்கையில்லா பிரேரணை ஆகியன இரத்தாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஏனைய அனைத்து நாடாளுமன்ற செயற்குழுக்கள் மற்றும் உப குழுக்கள் வலுவிழந்துள்ளதாக நாடாளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் நீல் [illegible]

ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களின் பிரகாரம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர், நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல சட்டமூலங்கள், பிரேரணைகள் மற்றும் வினாக்கள் இரத்தாவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்ற பதவிகளான சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தலைவர், சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி அமைப்பாளர்கள் என அனைத்து பதவிகளும் இரததாகியுள்ளதாகவும் அவர் [illegible]

# கட்சி அதிகாரங்களை கைப்பற்ற உரிமை கிடையாது

(கொழும்பு)



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவுக்கு கட்சியின் அதிகாரங்களை கைபபற்றுவதற்கு எந்த உரிமையும் கிடையாது என முன்னாள ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபகஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரங்களை கைப்பற்ற முயற்சிப்பதாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பாக நேற்றுமுன்தினம் அத்தனகல பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ கட்சியையும் சீரழித்து நாட்டையும் சீரழித்து சென்றவர். அவருக்கு மீண்டும் கட்சியின் அதிகாரங்களை கைப்பற்றும் உரிமை கிடையாது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவராகவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் இருக்கின்றார்.

அவர் மகிந்தவுக்கு இடமளிக்கப் போவதில்லையென தெளிவாக கூறியுள்ளார் என சந்திரிக்கா தெரிவித்துள்ளார்.

# மாணவர்களுக்கு கல்வியை விட ஒழுக்கம் மிக முக்கியம்

## யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு அரசாங்கம் பலகோடி ரூபா செலவில் தொழில் நுட்ப ஆய்வு கூடங்களை யும் கணனிகள் மற்றும் விஞ்ஞான உபகரணங்களையும் வழங்கியுள்ளது. இவற்றை மாணவர்கள் முழுமையாகப் பயன்படுத்தி உச்ச பயன்பெறுவதற்கு அதிபர், ஆசிரியர்கள், பூரணமான ஒதத்துழைப்பை வழங்க வேண்டும் என யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் நிறுவப்பட்ட பலகோடி ரூபா பெறுமதியான விஞ்ஞான தொழில்நுட்ப ஆய்வு கூடத்திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை கோண்டாவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற போது இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய வலயக கல்விப்பணிப்பாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கல்லூரி முதல்வர் கே.தவகீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ்வலயக கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றுகையில் எமது பிரதேச பாடசாலைகளின் அபிவிருத்திக்கு அரசாங்கம் பலகோடி ரூபாவைச் செலவழித்து நவீன கட்டடங்களையும் தொழில் நுட்ப உபகரணங்களையும் வழங்கி வரும் அதேவேளை சில தீய சக்திகள் எமது பிள்ளைகளின் கல்வியைச் சீரழித்து மோசமான சமூகமொன்றை உருவாக்குவதுடன் போதைப் பொருட்களையும் விநியோகித்து வருகின்றன.

தமது பிள்ளைகள் போதைப் பொருட்களைப் பாவிப்பதில்லை என்று பெற்றோர்கள் நினைக்கிறார்கள்.தங்கள் பாடசாலை மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாவதில்லை என்று பாடசாலை அதிபர்கள் நினைக்கிறார்கள். ஆனால் யாழ்.கல்வி வலயத்தில் ஐந்திற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் மாணவர்கள் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டமை கண்டறியப்பட்டு அவர்களின் பெற்றோர்கள வரவழைக்கப்பட்டு அவர்களுடன கலந்துரையாடி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.சில பாடசாலைகள் இத்தகைய விடயங்களை மறைத்து விட முயல்கின்றன. இது ஆபத்தானதாகும்.

மாணவர்கள் தமக்கு முன் பழக்கம் இல்லாதவர்கள் ஏதாவது பொருளைத் தந்தால் அதனை வாங்கி உண்டு விடக் கூடாது. இது பற்றி அதிபருக்கோ ஆசிரியருக்கோ அல்லது பெற்றோருக்கோ தயவு செய்து அறிவிக்க வேண்டும் கல்வியை விட ஒழுக்கம் முக்கியமானது. மாணவர்கள் சிறந்த ஒழுக்க சீலர்களாக திகழ்வதற்கு அவர்களிடையே போதியள விறகுப் போதைப் பொருள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுததப்பட வேண்டும்

போதையற்ற சிறந்த அறிவியல் சமூகம் உருவாவதற்கு அதிபர்களும் ஆசிரியர்களும் அர்ப்பணிப்புடன் தமது சமூகப் பொறுப்பை உணர்ந்து பணி யாற்ற வேண்டுமெனவும் தெரிவித்தார்.

(10)

# கல்விச்சுற்றுலா



வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் 4 இல் கல்வி கற்கும் 42 மாணவர்கள் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

அதிபர்,ஆசிரியர்கள், பெற்றோர்களுடன் யாழ்ப்பாணம் கோட்டை, சுப்பிரமணியம் பூங்கா,பொதுநூலகம் ,திருநெல்வேலி விவசாயப் பண்ணை,நல்லூர் கோவில் சங்கிலிய மன்னனின் சிலை போன்ற பல பயன் தரு இடங்களைப் பார்வையிட்டனர்.

கனடாவைச் சேர்ந்த பா.உதயசங்கர் தனது தந்தையார் பாலச்சந்திரனின் முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாணவர்களின் இச்சுற்றுலாவுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

காலை 8.30மணியளவில் வேலணையிலிருந்து தனியார் பேருந்து ஒன்றில் புறப்பட்டு வந்த மாணவர்கள் மாலை 4 மணியளவில மீண்டும் வேலணையைச் சென்றடைந்தனர்.

தமக்கு இது ஒரு புதிய அனுபவமாகவும், அறிவைத்தரும் பயனுள்ள பயணமாகவும் அமைந்ததாக அம் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

(137)

# பண்டாரநாயக்கா மண்டபத்தில் ஆயுர்வேத எக்ஸ்போ 2015

தேசிய வணிகர் கழக அனுசரணையுடன் இடம்பெறும் ஆயுர்வேத எக்ஸ்போ- 2015 எதிர்வரும் 3 ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கண்காட்சி, விற்பனை சர்வதேச ஆயுர்வேத மாநாடு ஆகிய விடயங்கள் உள்நாடடு, வெளிநாட்டு அரச மற்றும் அரச சார் பற்ற நிறுவனங்களுடன் இணைந்து முன்னெடுக்கப்படவுள்ளது.

இக் கண்காட்சியில் வடமாகாண சுதேச மருத்துவத திணைககளமும் தனது காட்சிப்படுத் தல்கள்,விற்பனை மற்றும் மாநாட்டு நிகழ்வுகளில் பங்கேற்கிறது.

மேலும் பாரம்பரிய ஆயுர்வேத மாநாடு எதிர்வரும் 4,5 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் பங்கேற்பதற்குப் பதிவு செய்யப்பட்ட தனியார் ஆயுர வேதமருத்துவ உத்தியோ கத்தர்களுக்கு கட்டணமாக 4000 ரூபாவும் , அரசாங்க சேவையில் உள்ள ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு 3500 ரூபாவும் அறிவிக்கப்பட்டுள்ளது இது தொடர்பான மேலதீக விபரங் களை www.ayurveda.expo.lk என்ற மின்னஞ்சல் முகவரியூடாக பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெங்காயச் செய்கையில் நோய்த்தாக்கம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கில் இம்முறை வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் ஒரு வகை கருகல் நோயின் தாக்கத்தை எதிர் கொண் டுள்ளனர்.

வடமராட்சியிலிருந்து வந்து வலி கிழக்கில் வெங்காய உற்பத்தியில் ஈடுப்டும் 100 இற்கும் அதிகமான விவசாயிகளே இந் நோயின் தாக்கம் குறித்து கவலை வெளியிட்டுள்ளனர்.

சிறப்பான விளைச்சலுக்காகவும் தரமான விதை வெங்காயத்தை பெறுவதற்குமாக மிக நீண்ட காலமாக வலிகாமம் கிழக்கிலிருந்து வந்து இந்த வெங்காயச் செய்கையில் நாம் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் இம்முறை எதிர்பாராத இந்த கருகல் நோயின் பாதிப்பை தாம் எதிர் கொள்வதாக தொண்டைமானாறு ஐக்கிய நாணய சங்கத்தில் அங்கம் வகிக்கும் விவ சாயி ஒருவர் தெரிவித்தார்.

இந் நோய் இப்போது எமக்கு புதிய பிரச்சினையாக இருக்கிறது. இப்பகுதி பயிர்ச்செய்கை ஆராய்ச்சி உத்தியோகத்தரின் கவனத்துக்கும் இவ்விடயத்தை கொண்டு வந்திருக்கின்றனர்.

இந்த நோய்க்கு ஒரு நிரந்தர தீர்வு கிட்டாத வரை வெங்காய செய்கையை இனியும் தொடர்வதில் பயனேதும் ஏற்படப் போவதில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(18)

# முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் யாழ். அரச அதிபருடன் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.முஸ்லிம்களின் மீள் குடி யேற்றத்தில் உள்ள தடைகள் மற் றும் மீள் குடியேற்றத்திற்கான தடைகள் பற்றி யாழ். அரச அதிபர் நா.வேதநாயகனுடன் முன்னாள் மாநகர சபை உறுப் பினர் மௌலவி பி.ஏ.எஸ். சுப்பியான் கடந்த புதன்கிழமை கலந்துரையாடினார்.

இச் சந்திப்பில் யுத்தம் முடிவிற்கு வந்ததன் பின்னர் இன்று வரை முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்திற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேல்லத திட்டம் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டதோடு, மீள் குடியேற்றத்திற்காக பதிந்து யாழ்ப்பாணத்திலே தற் போது வசித்துக் கொண்டிருப் போர்களின் தேவைகள் என்ன என்பதை முதல் கட்டத் திலும், மீள்குடியேற்றத்திற்காகப் பதிந்து விட்டு மீளவும் திரும்பிச் சென் றோர்களில் மீளத் திரும்புவதற்கு தற்போது விருப்பமுள்ளவர்களின தேவைகள் சம்மந்தமாகவும் யாழ்பபாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்போது வேறு மாவட்டங்களில் குடியிருப் போரில் யாழ்ப்பாணத்தில் உடனடியாக மீளக்குடியேற விருப்பமுள்ளவரகள் இருப்பினும் அவர்கள் தேவை என்ன? என்ற விபரங்கள் சரியான முறையில் திரட்டப்பட்டு முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்திற்கான விஷேட திட்டம் தயாரிக்கப்படுதல் வேண் டும் எனத் தீர்மானிக்கப்பட்டதுடன் இதற்கான வேலைத்திட்ட முன்னேற்பாடுகளை மாவட்ட செயலக அதிகாரிகள் உடன டியாக தயார்ப்படுத்தும் பணிகளை ஆரம்பிப்பதுடன் ரம்ழான் மாதம் முடிந்ததன் பின்பு யாழ்பபாணத்தில் முஸ்லிம் பகுதியில் நடமாடும் சேவையை நடாத்தி முஸ்லிம்களின் மீள்குடி யேற்றப் பதிவுகளை மீளாய்வு செய்து தேவையும் இனம் காணபடுவதுடன் தீர்வு காணக் கூடிய உடனடிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதுடன் முஸ்லிம் களின் மீள்குடியேற்ற சேவை மதிப்பீட்டின் முழுமையான அறிக்கையை ஜனாதிபதிக்கு சமர்ப்பிப்பது என்றும் தீரமானிக்கப்பட்டது.

## முரசின் இன்றைய பலன்

(29.06.2015 திங்கட்கிழமை

மன்மத வருஷம் ஆனி மாதம் 14 ஆம் திகதி.
சித்தயோகம் / துவாதசி திதி
அனுசம் நட்சத்திரம் பின் இரவு - 4.10 வரை பின் கேட்டை
இராகுகாலம் 7.26 - 8.56 வரை சுப நேரம் 11.56 - 1.26 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
முக்கிய பணிகளை பிறரின் பொறுப்பில் ஒப்படைப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்

**ரிஷபம்**
பொறுத்த கட்டத்தில் சகோதரர்களின் ஆதரவு கிடைக்கும்

**மிதுனம்**
தொழில் விடயமாக வெளியூர் செல்ல நேரிடலாம்

**கடகம்**
குடும்ப விடயத்தைப் பிறருடன் பகிர்வதால் சச்சரவு உருவாகலாம்

**சிம்மம்**
உங்கள் ஆலோசனையைச் செவிமடுக்க நண்பர்கள் நாடி வருதல்

**கன்னி**
அரசு வகையில் கோரியிருந்த உதவிகள் தாமதமின்றிக் கிடைகக்கும்

**துலாம்**
பிதாவின் தேக நலம் மேம்பாடு கண்டு அச்சம் மறைதல்

**விருச்சிகம்**
இல்லறத்துணையின் பேச்சு தன்னம்பிக்கையை ஏற்படுத்தும்

**தனுசு**
நீண்ட காலம் நிலவிய கடன் வெளியூர் பண வரவினால் தீர்ந்து விடல்

**மகரம்**
அவமானம் ஏற்பட்ட வேளை பொறுமையைக் கடைப்பிடித்தால ரகளை மறைதல்

**கும்பம்**
விழாக்களில் தம்பதியர் சகிதம் பங்குபற்றிச் சிறப்பித்தல்

**மீனம்**
விளையாட்டு,கலைத்துறையில் ஈடுபட்டு பரிசில் மற்றும் பாராட்டுக்கள் கிடைத்தல்

# தேசிய மட்ட வலைப்பந்து யாழ். மாவட்டம் இரண்டாமிடம்

(கொழும்பு)

தேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட ஆண்கள் அணி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

26ஆவது தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் விளையாட்டு விழா ஹோமாகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் ஆண்களுக்கான .வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் யாழ். மாவட்ட அணியும், கேகாலை மாவட்ட அணியும் மோதின. இரு அணிகளுமே கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் முனைப்புடன் இறுதி வரை செயற்பட்டது. ஆனால், கேகாலை அணி நிதானமாகச் செயற்பட்டு யாழ். மாவட்ட அணிக்கு நெருக்கடி கொடுத்தது. நிறைவில் கேகாலை மாவட்ட அணி 35-32 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இதேவேளை, மெய்வல்லுநர் போட்டிகளில் வடமாகாணம் நான்கு பதக்கங்களை வென்றுள்ளது. 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் யாழ். மாவட்ட வீராங்கனை ரஜிதா 34.6 மீற்றர் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும், 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் யாழ். மாவட்ட வீரர் அ. அசிமன் 50.2 செக்கனில் போட்டித் தூரத்தை நிறைவு செய்து வெண்கலப் பதக்கத்தையும், 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் யாழ். மாவட்ட வீரர் ராஜ்குமார் 1.86 மீற்றர் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும், 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான உயரம் பாய்தலில் கிளிநொச்சி மாவட்ட வீராங்கனை சுகிர்தா 1.53 மீற்றர் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர். (93)

## அசத்தியது தெல்லிப்பளை பிரதேசம்

(புதுக்குடியிருப்பு)


மீள் குடியேறிய கிராமங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட கரப்பந்து மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் தெல்லிப்பளை பிரதேச அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

சேவா லங்கா நிறுவனம் மீள்குடியேறிய கிராமங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடாத்தியது. இதில் முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பிரதேச அணிகள் பங்குகொண்டன. இப்போட்டி நேற்று முன்தினம் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

கரப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பளை பிரதேச அணியும் சண்டிலிப்பாய் பிரதேச அணியும் மோதின. மூன்று செட்களைக் கொண்ட இப்போட்டியில் தெல்லிப்பளை பிரதேச அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றது.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச அணியும் தெல்லிப்பளை பிரதேச அணியும் மோதின. இதில் தெல்லிப்பளை பிரதேச அணி 35-16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. (93)

# வடக்கின் தங்கம் இவள்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடாத்திய மாகாண மட்ட பளுதூக்கல் போட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த வி. ஆஷிகா தங்கப் பதக்கம் வென்று அசத்தியுள்ளார்.

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வரும் பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் பெண்களுக்கான பளு தூக்கல் போட்டி நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

58 கிலோ நிறைப் பிரிவில் போட்டியிட்ட சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 14 வயது நிரம்பிய ஆஷிகா 137 கிலோ நிறையைத் தூக்கித் தங்கப் பதக்கத்தை வென்றார். அத்துடன் அனைத்துப் பிரிவுக்கான சிறந்த வீராங்கனையாகவும் அவர் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இதேவேளை, வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான பளு தூக்கல் போட்டியிலும் ஆஷிகா தங்கப் பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. கடந்த 20ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மாகாண மட்ட பளு தூக்கல் போட்டியில் 17 வயதுப் பிரிவில் பங்குகொண்ட ஆஷிகா 135 கிலோ எடையைத் தூக்கி தங்கப் பதக்கத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த இரு ஆண்டுகளாக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வரும் போட்டிகளில் ஆஷிகா ஜொலித்து வருகின்றார். இவரின் சாதனைப் பயணம் சிகரம் தொட வாழ்த்துவோமாக...

## பிரேசில் அதிர்ச்சித் தோல்வி



கோபா அமெரிக்க கால்பந்து தொடரிலிருந்து பிரேசில் அணி வெளியேறியது. காலிறுதியில் பராகுவே அணியிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

தென் அமெரிக்க நாடுகள் பங்கேற்கும் 44ஆவது கோபா அமெரிக்க கால்பந்து தொடர் சிலியில் நடைபெற்று வருகின்றது. கான்சிபிசனில் நடைபெற்ற காலிறுதியில் பிரேசில், பராகுவே அணிகள் மோதின.

முதல் பாதியில் 15ஆவது நிமிடத்தில் பிரேசில் அணி வீரர் ரொபின்கோ ஒரு கோல் அடித்தார்.

இதற்கு 72ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி கிக் வாய்ப்பில் எதிரணியின் கான்சலாஸ் கோல் அடித்து பதிலடி தந்தார். இதன் பின் இரு அணி வீரர்களும் கோல் எதுவும் அடிக்கவில்லை. கூடுதல் நேர முடிவில் போட்டி 1-1 என சமநிலையானது. இதனால் போட்டி பெனால்டி ஷூட்-அவுட் முறைக்குச் சென்றது.

இதில் இரு அணிகளுக்கும் தலா 5 வாய்ப்பு வழங்கப்பட்டது. இதில் பராகுவே அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

# கண்டி லீக் அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றது யாழ்ப்பாணம்



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட கொரியா நட்புறவுக் கிண்ணத்தை யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் அணி கைப்பற்றிக் கொண்டது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கால்பந்தாட்ட லீக்குகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கண்டி கால்பந்தாட்ட லீக் அணியும் யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் அணியும் மோதின. முற்பாதி ஆட்டத்தில் முதல் கோலை அடித்து யாழ்ப்பாண லீக் அணி முன்னிலை பெற்றது.

பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோலடிக்கப் போராடியபோதிலும் கண்டி லீக் அணியின் முயற்சிகள் யாழ்ப்பாண லீக் அணியால் முறியடிக்கப்பட்டது. அத்துடன் சுபோதரன், றேம்சன் ஆகியோரின் அபாரமான செயற்பாட்டினால் அடுத்தடுத்து கோல்களையும் பெற்றது. நிறைவில் யாழ்ப்பாண லீக் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கொரியா நட்புறவுக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. யாழ்ப்பாண லீக் அணி சார்பாக சுபோதரன் இரண்டு, றேம்சன் ஒரு கோலைப் போட்டு அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர்.

# யூகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் சங்கா

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் மூத்த வீரர் சங்கக்கார, ஓய்வு தொடர்பாக கிளம்பிய யூகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார். ஆகஸ்ட் மாதம் சொந்த மண்ணில் நடைபெறவுள்ள இந்தியாவுக்கு எதிரான 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் இரண்டு டெஸ்ட்களில் மட்டுமே விளையாடுவேன். அத்துடன் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து விடைபெற்று விடுவேன் என்று சங்கக்கார நேற்று முன்தினம் கொழும்பில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், உலக கோப்பையுடன் ஒரு நாள் போட்டி மட்டுமின்றி டெஸ்டிலும் ஓய்வு பெற வி பினேன். ஆனால் தேர்வாளர்கள் னும் கொஞ்சக் காலம் டெஸ்ட் கிரி ஆடும்படி வேண்டுகோள் விடுத்த இதனால் மேலும் 4 டெஸ்ட் விளைய ஒப்புக் கொண்டேன் என்றார். தற்போ நடைபெற்று வரும் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில், கடைசி டெஸ்டில் ஆடமாட்டேன் என்று அவர் ஏற்கனவே கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

37 வயதான சங்கக்கார 132 டெஸ்டில் விளையாடி 38 சதம், 52 அரைச்சதங்கள் உட்பட 12,305 ஓட்டங்கள் குவித்துள்ளார். டெஸ்ட் அரங்கில் அதிக ஓட்டங்கள் எடுத்துள்ள வீரர்களின் பட்டியலில் சச்சின் டெண்டுல்கர், ரிக்கிபொண்டிங், கலிஸ், ராவிட் ஆகியோருக்கு அடுத்த இடத்தில் சங்கக்கார உள்ளார்.

இதேவேளை, சங்காவின் ஓய்வு குறித்து கருத்து வெளியிட்ட பீற்றர் மில்லர்: என்னைப் பொறுத்த வரையில் லாராவிற்கு பின் குமார் சங்கக்காராதான் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர். அவரை ரொம்ப மிஸ் பண்ணப்போகிறேன். அவர் போன்றதொரு துடுப்பாட்ட வீரர் இலங்கை அணிக்கோ அல்லது வேறு எந்த அணிக்கோ கிடைப்பது கடினம் எனத் தெரிவித்தார்.

# பெண்கள் உலகக் கிண்ண கால்பந்து; அரையிறுதியில் இங்கிலாந்து



பெண்கள் உலக கோப்பை கால்பந்துத் தொடரின் அரையிறுதிக்கு இங்கிலாந்து அணி முதல் முறையாக முன்னேறியது. காலிறுதியில் கனடாவை சொந்த மண்ணில் வீழ்த்தியது. கனடாவில் பெண்களுக்கான 7ஆவது பிபா உலக கோப்பை கால்பந்து தொடர் நடைபெற்று வருகின்றது. வான்கூவரில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதியில் இங்கிலாந்து, கனடா அணிகள் மோதின. ஆரம்பம் முதலே இங்கிலாந்து அணி அசத்தியது. போட்டியின் 11ஆவது நிமிடத்தில் டெய்லர் ஒரு கோல் அடித்தார். அடுத்த சில 14ஆவது நிமிடத்தில் தன் பங்கிற்கு இங்கிலாந்தின் லூாசி பிரான்ஸ் ஒரு கோல் அடித்து அசத்தினார். இதற்கு 42ஆவது நிமிடத்தில் எதிரணியின் கிறிஸ்டினா கோல் அடித்து பதிலடி தந்தார். இரண்டாவது பாதியில் இரு அணி வீராங்கனைகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. முடிவில், இங்கிலாந்து அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதன் மூலம், இத்தொடரில் முதல் முறையாக இங்கிலாந்து அணி அரையிறுதிக்குள் நுழைந்தது. இதற்கு

விளையாட்டுச் செய்திகள்

### பிரணவன், கனிஸ்ரன், தயுஸ்வரன் சிறப்பான செயற்பாடு

# மகாஜன கல்லூரி அபார வெற்றி

### சென். ஜோண்ஸ் கல்லூரியுடன் இன்று அரையிறுதியில் பலப்பரீட்சை

(தெல்லிப்பளை)

பிரணவன், கனிஸ்ரன், தயுஸ்வரன் ஆகியோரின் சிறந்த செயற்பாட்டின் மூலம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி யாழ். இந்துக் கல்லூரி அணியை வீழ்த்தி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

யாழ். மாவட்ட பாடசாலை கிரிக்கெட் சங்கம் தற்போது மாவட்ட அணிகளின் 17 வயதுப் பிரிவினருக்கிடையில் ஒரு நாள் போட்டியை நடாத்தி வருகின்றது. இத்தொடரின் காலிறுதி ஆட்டம் கடந்த திங்கட்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் யாழ். இந்துக் கல்லூரி அணியும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி பிரணவன் மற்றும் கனிஸ்ரன் ஆகியோரின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் மகாஜனக் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரணவன் 61, கனிஸ்ரன் ஆட்டமிழக்காது 44, டினேஸ் 36, சுஜீவன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிவலக்ஷன் மூன்று, சிவவிஸ்ணு இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 270 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி தயுஸ்ரனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் யாழ். இந்துக் கல்லூரி அணி 20.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கஜானன் 20 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களைப் பெற்று ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் தயுஸ்ரன் ஹட்ரிக் அடங்கலாக மூன்று, தனிஸ்ரன், சரண்ராஜ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். 194 ஓட்டங்களால் பெரு வெற்றிபெற்ற தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, இன்று சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி சென். ஜோண்ஸ் கல்லூரி அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

## ஜொலிப்பார் பெடரர்

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் பெடரரின் ஆதிக்கம் இம்முறை அதிகரிக்கும் என ரென்னிஸ் விமர்சகர்கள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் பெரிய கிண்ணங்களைக் கைப்பற்றிக்கொள்ளாத பெடரர் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் அதனை ஈடுசெய்யும் வகையில் செயற்படக் கூடிய வாய்ப்பு உள்ளது. ஏனெனில் விம்பிள்டன் ரென்னிஸ் களத்திலேயே அவர் அதிகம் ஜொலித்திருக்கிறார். ஓய்வை எதிர்நோக்கியுள்ள அவர் இம்முறை நிச்சயம் கிண்ணத்தை வெல்வார் என நம்பப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மாவட்ட மட்ட பெண்கள் கூடைப்பந்து இறுதியில் வேம்படி, கொக்குவில் இந்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடாத்தும் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிகள் முன்னேறியுள்ளன.

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடாத்துப்பட்டு வரும் இப்போட்டித் தொடர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டித் தொடர் வயது அடிப்படையில் நடைபெற்று வருகின்றது. இதில் 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான இரு அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி அணியும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியும் மோதின. இரு அணிகளுமே சமபலம் கொண்ட அணிகளாக ஜொலித்ததால் போட்டியில் பரபரப்பு அதிகரித்தது. அதற்கமைய இரு அணிகளும் மாறிமாறிப் புள்ளிகளைப் பெற்றவண்ணமிருந்தன. இறுதி வரை விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி 46-45 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் உடுவில் மகளிர் கல்லூரி அணியும் மோதின. இப்போட்டியும் இரசிகர்களுக்குப் பெரு விருந்து அளிக்கும் வகையில் அமைந்திருந்தது. இரு அணிகளும் மாறி மாறிப்புள்ளிகளைப் பெற்றதோடு வெற்றியைப் பெற்றுக் கொள்வதிலும் அதிக ஆர்வத்துடன் களத்தில் செயற்பட்டன. இருப்பினும் கொக்குவில் இந்துக்கல்லூரி 37-36 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. (93)

## சண்டிலிப்பாய் வசந்தசிறி, இந்து பிரதேச மட்ட போட்டிகளில் சம்பியன்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழகம் நடாத்திய பிரதேச இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான வலைப்பந்து மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகளில் வசந்தசிறி மற்றும் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் கழக அணிகள் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளன.

இப்போட்டிகள் கடந்த 24ஆம் திக்தி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் பிரதேசத்திற்குட்பட்ட இளைஞர் கழக அணிகள் பல பங்குகொண்டன.

வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் கழக அணியும் பண்டத்தரிப்பு ஜெசிந்தா இளைஞர் கழக அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய சண்டிலிப்பாய் இந்து இளைஞர் கழக அணி 25-18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற கரப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணியும் சிறிபாரதி அணியும் மோதின. இதில் 2-0 என்ற நேர் செட் கணக்கில் வசந்தசிறி அணி வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (93)

## வாய்ப்பு இங்கிலாந்துக்கே

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணி சிறப்பாகச் செயற்படும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. சிறந்த துடுப்பாட்டவரிசையைக் கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கு ரூத் பெரும் திருப்புமுனை மிக்க வீரராகத் திகழ்வார். அவருடைய துடுப்பாட்டம் இங்கிலாந்து அணிக்கு பெரும் பலமாக அமையும். அவருக்கு ஒத்துழைப்பு வழக்கும் வகையில் குக், பெல் போன்றோர் செயற்படவேண்டும் என இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

# வடக்கு மாகாண மட்ட ஹொக்கி யாழ். மாவட்டம் இரு பிரிவுகளிலும் சம்பியன்

(தெல்லிப்பளை)

வடக்கு மாகாண மாவட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற மாகாண ஹொக்கிப் போட்டியில் யாழ். மாவட்ட அணி இரு பிரிவுகளிலும் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளது.

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் தற்போது மாவட்ட அணிகளுக்கிடையில் பெரு விளையாட்டுப் போட்டியை நடாத்தி வருகின்றது. இதில் ஆண், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டி நேற்று முன்தினம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆண், பெண் அணிகள் பல பங்குகொண்டன.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும் மன்னார் மாவட்ட அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் களத்தில் செயற்பட்டதுடன் மாறி மாறிப்புள்ளிகளைப் பெற்றவண்ணமிருந்தது.

மன்னார் மாவட்ட அணிக்குக் கிடைத்த வாய்ப்பை அதன் முன் நிலை வீரர்கள் இறுதி நேரத்தில் கோட்டை விட்டதை அவதானிக்க முடிந்தது. வாய்ப்புக்களை சரிவரப் பயன்படுத்திய யாழ். மாவட்ட அணி வெற்றியையும் இறுதி வரை தன்வசப்படுத்தியது. நிறைவில் யாழ். மாவட்ட அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மாகாண சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும் மன்னார் மாவட்ட அணியும் மோதின. முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்களைப் பெற்றுக் கொள்ள முனைப்புடன் செயற்பட்டன. ஆனால் இரு அணிகளின் முயற்சிக்கும் முற்பாதி ஆட்டத்தில் பலன் எதுவும் கிடைக்கவில்லை.

பிற்பாதி ஆட்டத்தில் எழுச்சிபெற்று விளையாடிய யாழ். மாவட்ட அணி எதிரணி எதிர்பார்க்க நேரத்தில் கோல் ஒன்றைப் போட்டு முன்னிலை பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் மன்னார் மாவட்ட அணி செயற்பட்டபோதிலும் இறுதி வரையும் அதன் முயற்சி கைகூடவில்லை. நிறைவில் யாழ். மாவட்ட அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுமாகாண சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து ஆண், பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

இதிலும் மாகாணத்தின் பல அணிகள் பங்குகொண்டன. ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை யாழ். மாவட்ட அணியும், இரண்டாமிடத்தை மன்னார் மாவட்ட அணியும் பிடித்துக் கொண்டன.

பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட அணி முதலாமிடத்தையும் யாழ். மாவட்ட அணி இரண்டாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

ஏனைய போட்டிகள் தொடர்ந்து நடாத்தப்பட்டு வருவதாகவும், தடகளப் போட்டிகளை பெரும் விமர்சையாக நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் மாகாண விளையாட்டுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இடையூறு காரணமாக இடைநிறுத்தப்பட்ட ஆண்கள் கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் நடாத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. பெண்கள் கால்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட வவுனியா மாவட்ட அணியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (93)

# ரவெட்டி கொலின்ஸின் கால்பந்து முன்னேறிய அணிகள்

(கரவெட்டி)

கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு யங்ஹென்றீஸ், ஐக்கியம், உடுப்பிட்டி நவஜீவன்ஸ், நவிண்டில் அம்பாள் அணிகள் முன்னேறியுள்ளன.

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடர் கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நான்கு போட்டிகள் நடைபெற்றன.

முதல் போட்டியில் நெடியகாடு அணியும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோதின: இதில் நவஜீவன்ஸ் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.


மற்றுமொரு போட்டியில் குருநகர் பாடுமீன் அணியும் இளவாலை யங்ஹென்றீஸ் அணியும் மோதின. இதில் யங்ஹென்றீஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.


மூன்றாவது போட்டியில் நவிண்டில் அம்பாள் அணியும் இமையாணன் இளைஞர் அணியும் மோதின. இதில் அம்பாள் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வென்றது. இறுதியாக நடைபெற்ற போட்டியில் கொலின்ஸ் அணியும் ஐக்கிய அணியும் மோதின. இதில் ஐக்கிய அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (93)

# குரூர மனமுடையோர்...!

- எம்.ரீஷான் ஷெரீப் கட்டுரையிலிருந்து.

ஒரு மனிதனை எப்படியெல்லாம் நாம் துன்புறுத்தலாம்? சொற்களால், வார்த்தைகளால், செய்கைகளால், எமது நடத்தைகள் மற்றும் நடவடிக்கைகள் எல்லாவற்றாலும் ஒரு மனிதனை இலகுவாகத் துன்புறுத்தி விடலாம்.





துன்புறுத்தலுக்குள்ளாகும் மனிதனின் உணர்வுகளும், உடலும் ஒரே நேரத்தில் சீண்டப்படுகின்றன. அவற்றின் விளைவுகள் பாரதூரமானவை. நீச்சலை அறியாதவன் ஒருவனை நடுக் கடலில் தள்ளிவிடுவதைப் போல குரூரமானவை அவை.

ஆனால் அதைச் செய்பவனும் இன்னுமொரு சக மனிதனே. துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுபவனைப் போன்றே குருதியும், நரம்புகளும், அவயவங்களும் கொண்டவனே துன்புறுத்துபவனும். அவனுக்கு மட்டும் அம் மனநிலை எப்படி வாய்க்கிறது?

அதிகாரமும், ஆணவமும், பழி வாங்கலுமே இவ்வாறான துன்புறுத்தலுக்கு ஒரு மனிதனைத் தூண்டுகின்றன. இவ்வாறான துன்புறுத்தல்களை "சித்திரவதை" எனப் பொதுப் பெயர் கொண்டு அழைக்கலாம்.

இச் சித்திரவதைகள், தமது இருப்பிடங்கள், பணியிடங்கள் போன்றவற்றில் சக மனிதர்களாலும் கூட சர்வ சாதாரணமாக நடைபெற்று வருவதோடு அரசியல் ரீதியாகவும், அதிகார வர்க்கத்தாலும் கூட மனிதனைத் துன்புறுத்தல் எனும் இம் மனித உரிமை மீறலானது, எவ்விதக் கேள்விகளுக்கும் உட்படாதவண்ணம் நடைபெற்று வருகின்றது.

உலகம் முழுதும் இது பொருந்தும். ஆதி காலத்திலும், சாம்ராஜ்யங்களின் ஆட்சியின் போதும், தற்கால உலக அரசியலிலும் தமது ஆட்சிக்கு எதிராக இருப்பவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவும் அடக்கி வைப்பதற்காகவும் சித்திரவதை பிரயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது.

அதிகார வர்க்கத்தால் கைது செய்யப்படுபவர்களையும் யுத்தக் கைதிகளையும் பாதுகாப்பதற்காக அனேக சட்டங்கள் இருந்தபோதிலும், இந்த அதிகார வர்க்கங்கள் இச் சட்டங்களைக் கண்டுகொள்ளாமலிருப்பதை அண்மைய காலங்களில் பெருமளவில் காணக் கிடைக்கிறது.

பல நாடுகளில் அதிகார வர்க்கமானது பொதுமக்களை சர்வ சாதாரணமாக சித்திரவதைக்குள்ளாக்குவதை இணைய ஊடகங்கள் பலவற்றிலும் பரவலாகக் காணக் கிடைக்கிறது. அமெரிக்காவை முன்னிலைப்படுத்தியிருக்கும் ஏனைய பலம் வாய்ந்த உலக நாடுகளும் சித்திரவதையைப் பிரயோகிப்பதை மிகவும் விருப்பத்தோடு செய்து வருகின்றன. சித்திரவதையை சர்வ சாதாரணமாக பிரயோகித்து வரும் நாடுகளுக்கு பெரும் தடையாக இருப்பது சித்திரவதைக்கு எதிரான தற்போதைய சட்டங்களே. எனவே உலகம் முழுவதற்குமான சட்டங்களை இயற்றக் கூடிய வல்லமை பெற்றிருக்கும் அமெரிக்காவுக்கும், ஏனைய நாடுகளுக்கும், எவராலும் எதிர்த்துக் கேள்வி கேட்க முடியா வண்ணம், சித்திரவதையை சட்டபூர்வமான நிலையிலிருந்து செய்வதற்கான அனுமதியே தேவையாக இருக்கிறது.

இதில் அபாயமானது என்னவெனில், "சந்தேக நபர்களிடமிருந்து சில தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக சித்திரவதையைப் பாவிப்பது நியாயமானதே" என்ற கருத்தை பொதுமக்களிடம் பரப்புவதன் மூலம் சித்திரவதையை சட்டபூர்வமாக்குவது.

அமெரிக்காவிலும் இன்னும் சில நாடுகளிலும் சித்திரவதையை சட்டபூர்வமாக்க வேண்டும் என பொது மக்கள் கருத்துத் தெரிவிக்கும் அளவுக்கு இப் பயங்கர எண்ணக் கரு வளர்ச்சியடைந்திருக்கிறது.

2002 ஏப்ரல் மாதத்தில் அல்கொய்தா இயக்கத் தலைவர்களில் ஒருவரான அபூ சுபைதா கைது செய்யப்பட்ட பிற்பாடு அவர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி மேற்கு ஊடகங்களில் வெளிப்படையாகக் கலந்துரையாடப்பட்டன.

நாளை இந் நிலைமை எமது நாடுகளிலும் வரலாம். இது இன்னும் முன்னேற்றமடையுமானால் எதிர்காலத்தில் சித்திரவதையும் சட்டபூர்வமான ஒரு நடவடிக்கையாக மாறிவிடும். இதனை நாம் தடுக்க வேண்டும்.

இதன் காரணமாகவே ஒவ்வொரு வருடமும் ஜுன் 26 ஆம் திகதியை சித்திரவதைக்கு ஆளானோருக்கான சர்வதேச ஆதரவு நாளாகவும், சித்திரவதைக்கு எதிரான நாளாகவும் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

மனிதர்களை சித்திரவதைக்குள்ளாக்குவதுவும், காணாமல் போகச் செய்வதுவும், சட்டவிரோதமான முறையில் படுகொலை செய்வதுவும் ஆட்சியில் நிலைத்திருக்க அவ்சியமானவை எனக் கருதுவதால் ஆட்சியிலிருக்கும் எல்லா அரசுகளுமே தமது ஆட்சியை, எவர் தொந்தரவின்றியும் கொண்டு செல்வதற்காக இவற்றை பிரதானமாகப் பயன்படுத்துகின்றன.

தாம் எதிர்க்கட்சியாக இருக்கும் போது இவற்றுக்கெதிராகக் குரல் கொடுக்கும் எல்லாக் கட்சிகளும், தாம் ஆட்சியைக் கைப்பற்றிய பின்பு, இவற்றையே தாமும் செய்கின்றன.

ஒருவர் ஒரு குற்றம் செய்தால், அதனை விசாரித்து தக்க தண்டனை வழங்க நீதிமன்றத்தாலேயே முடியும். ஆனால் அதற்கு முன்பாக அந்த அதிகாரத்தை, வேறு நபர்கள் தம் கரங்களில் எடுத்துக் கொள்வதாலேயே குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான மனித உரிமை மீறல்களும் சித்திரவதைகளும் ஆரம்பிக்கின்றன. எனவே பொது மக்களைக் காக்க வேண்டிய காவற்துறையை, தமக்குப் பாதுகாப்பும் நியாயமும் தேடி நாடுவதற்கு மக்கள் தயங்குகின்றனர்.

மனித உரிமைகள் மீறப்படுமிடத்து, முறைப்பாடுகளைப் பதிவு செய்வதில் உள்ள சிக்கல்கள், காவற்துறைக்கு எதிரான வழக்குகளுக்காக வாதாட துணிச்சலும் நம்பிக்கையுமுள்ள சட்டத்தரணிகளை தேடிக் கண்டுபிடிப்பதில் உள்ள சிக்கல்கள், முறையிடுபவரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பு குறித்த சிக்கல்கள்...

எனவே சித்திரவதைக்கு எதிராக எவ்வளவுதான் சட்டங்கள் இயற்றப்பட்டாலும், அதிகாரத் தரப்பும், காவல் துறையும் தாம் பொதுமக்களுக்கு இழைக்கும் அநீதங்களைத் தாமாக உணரும் வரையில் சித்திரவதையை ஒழிக்கவே முடியாது.

இந் நிலை தொடருமிடத்து, சித்திரவதை உள்ளிட்ட அனைத்து மனித உரிமை மீறல்களும் மென்மேலும் வளர்ச்சியடையும் என்பதோடு, மனித உரிமைத் திணைக்களங்களும் ஒருங்கமைப்புக்களும் தமது பெயரில் மட்டுமே மனித உரிமையை வைத்திருப்பதுவும் தொடரும்.

எனவே மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்ந்தும் சர்வ சாதாரணமாக நிகழும். துரதிஷ்டவசமான இந் நிலைக்கு நாளை நானும், நீங்களும் ஆளாகலாம். அந் நாளில் எமக்காகப் பேசவும் எவருமிருக்க மாட்டார்கள்.

# இது தான் நோட்புக்

எல்லாவற்றுக்கும் ஸ்மார்ட்போனை பயன்படுத்தப் பழகிவிட்டோம். குறிப்பு எடுப்பதற்குக்கூட ஸ்மார்ட்போன்களில் ஏகப்பட்ட செயலிகள் இருக்கின்றன. டைப் செய்யாமல் ஸ்டைலஸ் கொண்டும் போன் திரையில் எழுதிக்கொள்ள முடியும். ஆனால் சிலர், என்னதான் வசதி வாய்ப்புகள் இருந்தாலும், காகிதத்தில் குறித்து வைப்பதுபோல் வராது என நினைக்கலாம். இவர்களுக்கெல்லாம் குறிப்பேடுதான் ஏற்றது. இருந்தாலும், குறிப்பேடுகளில் எழுதியவற்றை டிஜிட்டல் முறையில் சேமித்து வைத்து,




நினைத்த நேரத்தில் பயன்படுத்த முடியாது என்பது பெரும்குறை. இதற்குத் தீர்வாக, றொக்கெற் புக் எனும் புதிய குறிப்பேடுப் புத்தகம் அறிமுகமாகி உள்ளது.

இந்தக் குறிப்பேடு, இரு வேறு உலகங்கள் இணைந்ததாக உருவாக்கப்பட்டுள்ளது. இது, அடிப்படையில் காகிதக் குறிப்பேடு. ஆனால், இதில் குறித்துவைக்கும் விஷயங்களை டிஜிட்டல் வடிவில் இணையத்திலும் சேமித்துக்கொள்ளலாம். புளூடூத் போன்ற எந்த இணைப்பும் இல்லாமல் இந்த மாயத்தை றொக்கெற் புக் சாத்தியமாக்குகிறது.

சாதாரண காகிதக் குறிப்பேடு போலவே இதில் தகவல்களைக் குறித்துவைக்கலாம். எழுதியவுடன், உங்கள் போனின் கமராவை இதன் மீது காட்டினால் போதும். அந்தப் பக்கம் தானாக ஸ்கான் செய்யப்பட்டு, உங்களுக்கான ட்ரொப் பொக்ஸ் போன்ற கிளவுட் சேவைகளில் சேமிக்கப்பட்டுவிடும். தேவையான டிஜிட்டல் சேவைகளுக்கான ஐகொன்கள் ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் இடம்பெற்றுள்ளன. அவற்றில் தேவையானதை மை பூசி அடையாளம் காட்டினால் போதும். செயலி எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளும். ஆக, காகித நோட்டை பயன்படுத்தியது போலவும் இருக்கும், அதே நேரத்தில் அவற்றை டிஜிட்டல் வடிவில் பாதுகாப்பாக சேமித்தும் வைத்துக்கொள்ளலாம்.

**றொக்கெற்புக் இணைய பக்கம்:**

https://www.indiegogo.com/projects/rocketbook-cloud-integrated-microwavable-notebook

# உறக்கம் வராமல் தவிக்கிறீர்களா?



❁ இரவில் தூக்கம் வராதவர்கள் சேமியா கஞ்சி ஒரு டம்ளர் குடித்துவிட்டுப் படுத்தால் நன்றாகத் தூக்கம் வரும்.

❁ மருதாணிப் பூவைத் தலையணை உறையில் நிறையப் போட்டு அதில் தலை வைத்துப் படுத்தால் தூக்கம் வரும்.

❁ பத்து புதினா இலைகளை அரை டம்ளர் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி வடிகட்டிக் குடித்தால் தூக்ச

❁ இரவு படுக்கைக்குச் செல்லும் முன் வெங்காய சூப்பைப் பருகிவ்

படுத்தால் காலையில்தான் விழிப்பு வரும்.

❁ வெதுவெதுப்பான தண்ணீரில் ஒரு கரண்டி தேன் கலந்து குடித்தாலு தூக்கம் வரும். ஆனால் தொடர்ந்து தூக்க மாத்திரை சாப்பிடுபவருக்கு இது வேலை செய்யாது.

# அசத்தல் ஆப்கள




இணையதளம் போலவே இப்போது ஆப்ஸ் எனப்படும் செயலிகளும் பிரபலமாக இருக்கின்றன. செயலிகள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. அவற்றில், உங்களுக்கு தேவையானதை தேர்வு செய்துகொள்வது கொஞ்சம் சவாலானதுதான். இதற்கும் எண்ணற்ற வழிகள் இல்லாமல் இல்லை.

அந்தவகையில், உங்கள் செயற்பாட்டை மேம்படுத்திக்கொள்ள உதவும் அருமையான செயலிகளை பட்டியலிட்டு, அழகான வரைபட சித்திரமாக (இன்போகிராபிக்) வெளியிட்டுள்ளது ரொப் ஆப்ஸ் இணையதளம். பல முக்கிய செயலிகள் இந்த பட்டியலில் இருக்கின்றன. (http://www.topapps.net/android/productive-app.html/) இதேபோன்ற பட்டியலை, http://www.tomsguide.com/us/pictures-story/588-best-productivity-apps.html தளமும் அளிக்கிறது.

# உலகின் முதல் ஓட்டோஃபிக்ஷன் சினிமா



உத்தம வில்லனில் மனோரஞ்சனின் வாழ்க்கை சோ.ஃ.பாக்ளிஸ், யூரிப்பிடஸ், ஷேக்ஸ்பியர் போன்ற நாடகாசிரியர்கள் எழுதியிருக்கக் கூடிய ஒரு துன்பவியல் நாடகம். அதில் கமல்ஹாசனின் வாழ்க்கை தெரிகிறது. ஆனால் இது என் வாழ்க்கை அல்ல என்று சொல்லிக் கொண்டே அவர் வாழ்க்கையைச் சொல்கிறார். அது ஒரு மாஜிக் போல, கண்கட்டு வித்தையைப் போல நடக்கிறது. மனோ ரஞ்சன் தான் கமல். ஆனால் மனோரஞ்சனைப் போல் கமல் குடிகாரர் அல்ல. மனைவி மாமனார் ஆகியோரிடம் பயந்து வாழ்பவரும் அல்ல. ஆனாலும் மனோரஞ்சன் தான் கமல். கமல் தான் மனோரஞ்சன். இந்த மாயாஜாலத்தை நிகழ்த்துவது எது?

இங்கேதான் நாம் கொஞ்சம் தமிழை விட்டு வெளியே சென்று autofiction என்ற விஷயத்துக்குள் செல்ல வேண்டியிருக்கிறது. ஓட்டோ.ஃ.பிக்ஷன் என்ற genre-இல் எழுதுபவர்கள் இன்று வெகு சொற்பம். உலக அளவிலேயே இரண்டு மூன்று பேர்தான். Fils என்ற நாவலுக்கு எழுதிய சிறிய முன்னுரையில் Serge Doubrovsky ஓட்டோ.ஃ.பிக்ஷனுக்கான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். சேர்ஜ் துப்ரோவ்ஸ்கி ஒரு ஓட்டோ.ஃ.பிக்ஷன் எழுத்தாளர். ஓட்டோ.ஃ.பிக்ஷன் என்ற வார்த்தையையும் அவர்தான் முதல் முதல் பயன்படுத்தினார். அவர் கொடுத்துள்ள விளக்கத்தை வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்க்காமல் அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முயல்வோம்.

சுயசரிதையை எழுத ஒருவர் பிரபலமான ஆளாக இருக்க வேண்டும். மட்டுமல்லாமல், அதில் ஒரு ஸ்டைல் இருக்க வேண்டும். அதில் உள்ள சம்பவங்களெல்லாம் உண்மையாக இருக்க வேண்டும். ஆனால் ஓட்டோ.ஃ.பிக்ஷன் சாகசத்தின் மொழியை மொழியின் சாகசத்திடம் ஒப்படைக்கிறது. அதாவது, ஓட்டோ.ஃ.பிக்ஷன் மொழியின் இலக்கணங்களுக்கோ வரையறைகளுக்கோ, பாரம்பரிய மற்றும் நவீன கால மதிப்பீடுகளுக்கோ அடங்காதது. அவற்றுக்கு அப்பாற்பட்டது. சுயசரிதையின் ஆடம்பரங்கள் இல்லாமல் எதார்த்தமாக இருப்பது ஓட்டோ.ஃ.பிக்ஷன். சுருக்கமாகச் சொன்னால், சுயசரிதை என்பது சுயமைதுனத்தைப் போல் ஆனால் ஓட்டோ.ஃ.ப்ரிக்ஷன் தன்னுடைய இன்பத்தை உள்ளுக்குள்ளேயே வைத்துக் கொள்ளாமல் வெளியே பகிர்ந்து கொள்வது.

மேலே உள்ள கடைசி வாக்கியத்தில் உள்ள ஓட்டோ.ஃ.ப்ரிக்ஷன் என்பது அச்சுப்பிழை அல்ல; துப்ரோவ்ஸ்கியின் கிண்டல். இந்தக் கிண்டலாலும் சொல் விளையாட்டுக்களாலும்தான் துப்ரோவ்ஸ்கியின் நாவல்களை மற்ற மொழிகளில் மொழிபெயர்க்க முடியவில்லை. உதாரணமாக, அவருடைய .ஃ.பீல்ஸ் (Fils) என்ற நாவலின் தலைப்புக்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. புதல்வன், நூல் (Thread).

உத்தம வில்லனை நீங்கள் சுயவரலாற்று சினிமாவாக அர்த்தப்படுத்திக் கொண்டால் படத்தின் ஊடே ஊடே பாவியிருக்கும் நுண்மையான தருணங்களை அனுபவிக்காமல் இழந்து விட நேரிடும். சுயசரிதை சினிமா என்றால் நம் நினைவுக்கு வருவது .ஃ.பெலினியின் 8 - மற்றும் I Vitelloni ஆகிய படங்களும், ஆலன் ரோப்-க்ரியேவின் (Alain Robbe-Grillet) நாவல்களும்தான். ரோப்-க்ரியே சினிமா இயக்குனரும் கூட. ரோப்-க்ரியே சுயசரிதை நாவல்களை எழுதினாலும் கூட சுயசரிதைத்தன மான எழுத்தின் எல்லை குறுகியது என்றும், கடந்த க்காலத்தைத் திரும்ப எழுதும் போது அதில் கடந்த காலம் ஓரளவுதான் இருக்கும் என்றும் சொல்கிறார். .ஃ.பெலினியின் மேற்கூறிய படங்களையும் உத்தம வில்லனையும் பார்த்தால் சுய்சரிதைத்தனமான சினிமாவுக்கும் ஓட்டோ.ஃ.பிக்ஷன் சினிமாவுக்குமான வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளலாம். இதை விளக்கி எழுதுவது கடினம். கயிறின் மேல் நடப்பது போன்ற ஒரு மரண விளையாட்டு. இதை மிகுந்த சாகசத்தன்மையோடு விளையாடியிருக்கிறார் கமல். பார்த்தால் கமலின் வாழ்க்கை போல் தெரிகிறது. ஆனால் கமல் இல்லை. இந்த மாயாஜாலம்தான் ஓட்டோ.ஃ.பிக்ஷன். ஓட்டோ.ஃ.பிக்ஷன் எழுதும் எழுத்தாளர்களே உலக அளவில் ஒன்றிரண்டு பேர் தான் இருக்கிறார்கள். அதிலும் இரண்டு பேரின் படைப்புகள் பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வில்லை என்கிற போது ஓட்டோ.ஃ.பிக்ஷன் சினிமா எப்படி சாத்தியம்? கமலுக்கு .ஃ.ப்ரெஞ்ச் தெரியுமா, அவர் துப்ரோவ்ஸ்கியைப் படித்திருக்கிறாரா, அவருக்கு ஓட்டோ.ஃ.பிக்ஷன் தெரியுமா என்றெல்லாம் எனக்குத் தெரியாது. அதையெல்லாம் பத்திரிகை யாளர்கள்தான் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும். ஆனால் ஒன்று, உலகின் மகத்தான சிறுகதை எழுத்தாளனான போர்ஹேஸுக்குப் பின்நவீனத்துவம் பற்றித் தெரியாது. என்றாலும், போர்ஹேஸ் ஆகச் சிறந்த பின்நவீனத்துவ எழுத்தாளராகக் கருதப்படுகிறார். எப்படியிருந்தாலும், கமல்ஹாசனின் உத்தம வில்லன் உலகின் முதல் ஓட்டோ.ஃ.பிக்ஷன் சினிமா என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை.

**- சாரு நிவேதிதா**

---

# அஷ்டமாசித்தி 1



**ஜப்பானிய பழங்கதை**
**(யாஸோ - கிதான் என்ற புராதன ஜப்பானிய கிரந்தத்திலிருந்து எடுக்கப்பட்டது.)**
**தமிழில் : புதுமைப்பித்தன்**

டென்ஷொ வம்சத்தின் ஆதிக்கத்தின்போது, கியாட்டோ என்ற வடக்குப் பிராந்தியத்தில் குவான்ஷின் கோஜி என்ற வயோதிகன் வாழ்ந்து வந்தான். நீண்டு நெஞ்சை மறைக்கும் வெள்ளைத் தாடியுடன், ஷிண்டோ குருக்கள்மார் போல உடையணிந்து பௌத்த சித்திரங்களைக் காட்டியும் தர்மத்தை ஜனங்களிடையே உபதேசித்தும் பிழைத்து வந்தான்., தினம் தினம் அவன் கியோன் ஆலயத்தின் பிரகாரத்தில் உள்ள பெரிய மரத்தில் ஒரு பெரிய படச் சீலையைத் தொங்க விடுவான். அதிலே யமலோக சிட்சைகள், தண்டனைகள் எல்லாம் தீட்டப்பட்டிருந்தன.

எத்தனை நரகங்கள் எத்தனை வித வாதனைகள். படத்தைப் பார்த்தால் நிஜம் போலத் தோன்றும். அதைப் பார்க்கக் கூடும் ஜனத்திரளுக்கு, இந்தக் கிழவன் தன் கையிலுள்ள நியோயி தண்டை நீட்டி படத்துச் சிட்சைகள் ஒவ்வொன்றையும் சுட்டிக் ...ாட்டி காரண காரிய நியதியையும் ...ிளக்குவான். பிறகு புத்த பகவான் ...பதேசங்களைக் கடைப்பிடிக்கும்படி ...ற்புறுத்துவான். படத்தைப் பார்க்க ... அவனது பேச்சைக் கேட்கவும் ...ங்கள் ஏராளமாகக் கூடுவார்கள். ... சமயங்களில் கிழவன் தனக்கு ...னால் பிச்சைக்காக ஒரு பாயை விரித்திருப்பான் அதில் வந்து விழுகிற காசு பாயையே மறைத்துவிடும்.

அந்தக் காலத்தில் ஓடா நோபு நாகன் என்பவன் கியாட்டோவையும் அடுத்துள்ள பிராந்தியங்களையும் ஆண்டு வந்தான். அவனுடைய பரிவாரத்தில் ஆரகாவா என்று ஒருவன் உண்டு. அவன் ஒருநாள் கியோன் ஆலயத்துக்கு வந்தபோது படத்தைப் பார்த்தான். பிறகு ராஜ சன்னிதானத்திலே அதைப் பற்றி விஸ்தரித்தான். ஆரகாவனுடைய பேச்சை நோபு நாகன் சுவாரசியமாகக் கேட்டான். உடனே படத்தை எடுத்துக்கொண்டு அரண்மனைக்கு வரவேண்டும் என்று குவான்ஷின் கோஜிக்கு உத்தரவிட்டான்.

சித்திரச் சீலையைப் பார்த்தவுடன் நோபு நாகன் ஆச்சரியத்தால் பிரமித்துப் போனான். படம் நிஜம் போல கண்ணுக்கு முன்னால் நின்றது. யமகிங்கரர்களும் தண்டனை அனுபவித்து தவிக்கும் ஜீவன்களும் தனக்கு முன்னால் நடமாடுவது போல் தெரிந்தது. ஜீவன்கள் வாதனை பொறுக்க முடியாமல் ஓலமிடுவதும் கேட்டது. படத்தில் தீட்டியிருந்த இரத்தம் பிரவாக மெடுப்பது போலவே தோன்றியது; தன்னையறியாமலே படத்தில் ஈரக்கசிவு இருக்கிறதோ என படத்தை விரல் கொண்டு தொட்டுப் பார்த்தான். படச் சீலை காய்ந்துதான் கிடந்தது.

ஆச்சரியம் மேலிட்டவனாய், நோபு நாகன், "இந்தப் படத்தை எழுதியவன் யார்?" என்று கேட்டான். புகழ் பெற்ற ஒகூரி ஸோட்டான் என்ற சித்திரக்காரன் இந்தப் படத்தைத் தீட்டினான் என்று குவான்ஷின் கோஜி அறிவித்தான். நூறு தினங்கள் தவமிருந்த பிற்பாடு கியோமிட்ஸு ஆலயத்து குவானன் என்ற தெய்வத்தை வணங்கிய பின் சித்திரக் காரன் இந்தப் படத்தை வரைந்தானாம்.

நோபு நாகனுக்குப் படத்தில் நாட்டமிருப்பது கண்டு ஆரகாவன், மன்னனுக்குக் காணிக்கையாகப் படத்தைக் கொடுத்துவிட சம்மதமா என்று குவான்ஷின் கோஜியைக் கேட்டான். கிழவன் அதற்குப் பதில் சொன்னான்.

"இந்தப் படம் ஒன்றுதான் நான் மதிக்கும் சொத்தாக என்னிடம் இருந்து வருகிறது. அதை ஜனங்களிடம் காட்டி வயிறு பிழைக்கிறேன். இதை நான் மன்னனுக்குக் காணிக்கையாகச் செலுத்திவிட்டால், வேறு எனக்குப் பிழைப்புக்கு வழி ஏது? மகாராஜாவுக்குப் படத்திலே ரொம்பவும் ஆசை என்றால் நூறு பொற்காசுகள் எனக்குக் கொடுக்கட்டும். அந்தப் பணத்தைக் கொண்டு நான் ஜீவனம் செய்துகொள்வேன். இல்லாவிட்டால் படத்தைக் கொடுக்க முடியாது."

நோபு நாகனுக்கு இந்த பேரம் பிடிக்கவில்லை. மௌனமாக இருந்து விட்டான். ஆரகாவன் ரகசியமாக இவன் காதில் எதுவோ ஓதினான்.

அவனும் சம்மதித்துத் தலையை அசைத்தான். குவான்ஷின் கோஜிக்கு ஏதோ சொற்பத் தொகை பரிசில் வழங்கி அவனை அனுப்பி விட்டார்கள்.

கிழவன் மாளிகையை விட்டு வெளியேறியதும் ஆரகாவனும் ரகசியமாக அவனைத் தொடர்ந்தான். படத்தை எப்படியாவது மோசடியாக கிழவனிடமிருந்து பறித்து விட வேண்டும் என்பது அவன் நினைப்பு. சௌகரியமும் கிடைத்தது. நகரத்துக்கு வெளியே உள்ள மலையை நோக்கிச் செல்லும் பாதையை மேற்கொண்டான் குவான்ஷின் கோஜி. மலையடிவாரத்திலே பாதை திடீரென்று திரும்பும் தன்னந்தனிமையான இடத்தில் ஆரகாவனிடம் அவன் அகப்பட்டுக் கொண்டான். "படத்துக்கு நூறு பொன் கேட்க பேராசை பிடித்து ஆட்டுகிறதோ? அதற்குப் பதிலாக மூன்று முழ இரும்புத் துண்டு உனக்குப் பரிசாகக் கிடைக்கிறது பார்ஷ" என்று மிரட்டி வாளையுருவி கிழவனைக் குத்திவிட்டு படத்தை எடுத்துக்கொண்டு திரும்பினான்.

மறுநாள் சித்திரச் சீலையை நோபு நாகன் பாதத்தில் சமர்ப்பித்தான். குவான்ஷின் கோஜி முந்திய தினம் கடைசியாக அரச சன்னிதானத்தில் எப்படி படச்சீலையைச் சுருட்டிக் கட்டியிருந்தானோ அப்படியே இருந்தது. உடனே படத்தைத் தொங்கப் போடும்படி நோபு நாகன் உத்தரவிட்டான். படச் சீலையை விரித்துத் தொங்கப் போட்டபொழுது மன்னனும் ஆரகாவனும் அதிசயித்துப் போனார்கள். வெறும் சீலை மட்டுந்தான் தொங்கியது. அதில் படத்தைக் காணவில்லை. எப்படிப் படம் மறைந்தது! என்பதை விளக்க முடியாமல் தவித்தான் ஆரகாவன். தெரிந்தோ தெரியாமலோ எஜமானனை ஏமாற்றிய குற்றத்துக்காக சிறைத் தண்டனை பெற்றான்.

தண்டனைக் காலம் முடிவடைந்து வெளி வந்த க்ஷணத்திலேயே குவான்ஷின் கோஜி, கிட்டானோ ஆலயத்தில் படத்தைக் காட்டிக் கொண்டு பிழைப்பதாகக் கேள்விப் பட்டான். கேட்டதை நம்ப முடியவில்லை. ஆனால் இந்தச் சேதி அவனது நெஞ்சில் அற்ப நம்பிக்கையை விதைத்தது. எப்படியாவது கிழவனைச் சந்தித்து சித்திரச் சீலையைப் பெற்றுத் தனது குற்றத்துக்குப் பரிகாரம் தேடிக் கொள்ள முடியும் என நம்பினான். உடனே தனது பணியாட்களைத் திரட்டிக் கொண்டு கோயிலுக்குப் போனான். ஆனால் குவான்ஷின் கோஜி சென்றுவிட்டான் என்ற தகவல்தான் கிடைத்தது.

சில நாட்கள் கழித்து கியோமிட்ஸு ஆலயத்தில் கிழவன் படங்காட்டிக் கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்தது. ஆரகாவன் கோயிலுக்கு ஓடினான்; கூட்டம் கலைவதைத்தான் கண்டான் கிழவனைக் காணவில்லை.

(தொடரும்)

# நிகழ்வுகளின் பதிவுகள்....






சுன்னாகம் பொது நூலகத்தின் பொன்விழா நிகழ்வும், மலர் வெளியீடும் அண்மையில் நடைபெற்றபோது மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், நூலகர் திருமதி கருணாநிதி உரையாற்றுவதையும், நூல் வெளியீடு செய்யப்படுவதையும் காணலாம். (137)





யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப்பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்றவர்களுக்கு திருநெல்வேலி பல்கலைக்கழக மக்கள் வங்கியினால் பரிசில்கள் வழங்கப்பட்ட போது பாடசாலை அதிபர் நா.மகேந்திரராஜா, வங்கி முகாமையாளர் எஸ்.சத்தியமூர்த்தி மற்றும் அதிகாரிகளைக் காணலாம். (137)




**அண்மையில் யாழ்.கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்ட போது...**




சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் நல்லூர் பொது சுகாதார ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் திருமதி.ய.எட்ணாம்ரிய விண்னேற்ரொ்னி மாணவர்களுக்கு யோகாசனம் பற்றிய கருத்துரைகளை வழங்குவதையும், பயிற்சி வழங்குவதையும் காணலாம். (137)

# விலங்குகள் கூட செய்யத் துணியாத வக்கிரங்களில் இருந்து விடுபடவேண்டும்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மனிதத்துவத்தை மறந்து பணத்துக்காக எதையும் செய்கின்ற, விலங்குகள் கூட செய்யத் துணியாத வக்கிரங்களை செய்வதற்கு துணிந்திருக்கின்ற மனித சமூகத்தின் மத்தியில் எமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி எமக்கு வழிதர வேண்டும் அந்த வழியே நமக்கு ஒளியாக அமைய வேண்டும் அதற்கு இவ்வாறான பிரார்த்தனைகளே வளம் சேர்க்கும என யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற 'மனிதம் பேணுவோம், பண்பாடு காப்போம்' எனும் தொனியில் அமைந்த பண்பாட்டு விழுமியங்களுடனான வாழ்வுக்கான பிரார்த்தனையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில, இவ்வாறான செயற்பாடுகள் நடைமுறையில் கொண்டுவரப்படவேண்டும். இன்று நாம் மனிதத்தை தொலைதவர்களாக மனித பண்பாட்டு விழுமியங்களை மறந்தவர்களாக செயற்படுவதைக் காணலாம். பணத்திற்காக எதையும் செய்கின்ற ஒரு நிலை இன்று இருக்கின்றது.

பணத்திற்காக நாம் மற்றவர்களை மதிப்பதும், தீங்கு விளைவிக்காமல் இருப்பதும் என்ற நிலை மாறி எதையும் செய்யலாம் என்ற ஒரு நிலை இன்று உருவாகியுள்ளது. இவ்வாறான பிரார்த்தனை மூலம இதனை நாம் சமூகத்திலிருந்து விடுவிக்க முடியும் எல்லோரும் காலத்தின் தேவையில் மனிதத்தை பேணுவதற்கும் பண்பாட்டைக் காப்பதற்கும். இவ்வாறான பிரார்த்தனையில் ஈடுபடவேண் டும்

இந்நிகழ்வின் மூலம் எம்மால் செய்ய முடியாத இந்த தேவையை இறைவனால் மட்டுமே செய்ய முடியும் என்பதையே வெளிக்காட்ட முடிகிறது.நாம் வழிதவறியவர்களாக எங்களுடைய மனிதப் பண்பாடுகளை மறந்தவர்களாக இருப்பதனாலேயே தற்போது சமூகப் பிறழ்வுகள் ஏற்பட்டுள்ளன.

நாம் ஏழைகளுக்கு உதவ மறுப்பவர்களாக, இரக்கமற்ற குணத்தையுடையவர்களாக மாறியுள்ளோம். அதை எல்லோரும் இவ்வாறான பிரார்த்தனை மூலம் களைந்து கொள்ளமுடியும்.

எந்தவொரு செயலையும் ஒற்றுமையின் மூலம் சாதிக்க முடியும் செய்ய முடியாதது ஏதும் இல்லை. நல்ல ஒரு சிந்தனையில் இடம்பெறுகின்ற எந்த ஒரு நிகழ்வுக்கு எமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியின் உதவி எப்போதும் கிடைத்துக் கொண்டே இருக்கும் அதன் மூலம் எமது எதிர்பார்ப்பு நன்கே நிறைவுபெறும். மற்றய இடங்களிலும் பார்க்க சிறந்த ஒரு மனிதப் பண்பாடு கொண்ட கலாசாரத்தை உடைய தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள் என்ற நிலையில் இருந்து அதனை நாம் இன்று இழந்து கொண்டு போகின்றோம் ஆகவே இதனைத் தடுக்க இவ்வாறான ஆராதனை நிகழ்வுகள் வலுச் சேர்க்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ,25)

# ரமழான் சிந்தனை




இஃதிகாஃப் என்பது பள்ளியில் தரித்திருப்பதாகும். ரமழான் மாதக் கடைசிப்பத்து இரவும் இஃதிகாஃப் இருப்பது சுன்னத் முஅக்கதாவாகும். இதனால் நற்காரியம் செய்பவராகவும், பாவங்களை விட்டும் பாதுகாக்கப்படுகின்றார்.

(நூல் - மிசுஷகாத்)

ஸஹர் முடிவு : அதிகாலை 4.19
நோன்பு திறக்கும் நேரம் : மாலை 6.36

(105)

# போதை எதிர்ப்புக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவில் இராம கிருஸ்ண மகாவித்தியாலயத்தில் மது, போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த வாரம் இடம்பெற்றது.

கோண்டாவில் ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் ஊடாக சமூக ஆர்வலர் கெங்காதரனின் ஏற்பாட்டில் மீசாலை தமிழ் மகாவித்தியாலய ஆசிரியர் சுரேஸ் குமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி சிவரூபன், புளொட் தலைவரும் வட மாகாணசபை உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன், கோண்டாவில் இராம கிருஸ்ண மகாவித்தியாலய அதிபர் ஆர்.சரவேஸ்வரன், கோண்டாவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலய முன்னாள் அதிபர் சண் வாமதேவன் மற்றும் ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் கோண்டாவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் ஆகியன சார்பாக அதன் பொருளாளர் செ.செந்தூரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந்த விழிப்புணர்வு கருத்தரங்கில் கோண்டாவில் இராம கிருஸ்ண மகாவித்தியாலயம், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம், கோண்டாவில் பரஞ்சோதி மகாவித்தியாலயம், திருநெல்வேலி முத்துதம்பி மகாவித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பங்கேற்றிருந்தனர்.

# சட்டவிரோத மணல் கைது

(சாவகச்சேரி)

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச்சென்ற இரு டிப்பர் சாரதிகளுக்கு தலா 5,000 ரூபாய் அபராதம் விதிக்க, சாவகச்சேரி நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் கடந்த வெள்ளிக்கிழமை உத்தர விட்டதாக கொடிகாமம் பொலிஸார் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கிளாலி பகுதியில் இருந்து கொடிகாமம் மிருசுவில் பகுதிக்கு சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச்சென்ற இரு டிப்பர் வாகனங்களை கொடிகாமம் பொலிஸார் பறிமுதல் செய்திருந்தனர்.

சந்தேகநபர்களுக்கு எதிராக பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சந்தேக நபர்கள் தாங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்தே அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# விபத்தில் இளைஞர் படுகாயம்

(கொக்குவில்)

கொக்குவில் பூநாறி மரத்தடி பகுதியில் நேற்று இடம்பெற்ற வபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காந்திஜீ வீதி கொக்குவிலைச் சேர்ந்த டெனிஸ்ரன் (வயது 20) என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் வீதியில் கொட்டப்பட்டிருந்த கற்களில் சறுக்கி மின்கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதாக விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# உடையார் கட்டு தமிழ் வித்தியில் ஆய்வுகூடம் திறப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, உடையார் கட்டு தமிழ் மகாவித்தியாலயத்தில் தொழில்நுட்ப ஆய்வுகூடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் க.சிவகணேசன் (பவன்) பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆய்வு கூடத்தினை திறந்து வைத்தார்.

பாடசாலையின் அதிபர் மகேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், அயல் பாடசாலைகளின் அதிபர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள், வலயக் கல்வி அதிகாரிகள் பங்கு பற்றியிருந்தனர்.

# வட, கிழக்கில் 20,000 தொழில் வாய்ப்பு உருவாக்க அமெரிக்கா உதவ வேண்டும்

## முன்னாள் அமைச்சர் றிசாத் தெரிவிப்பு

வடக்கிலும் கிழக்கிலும் 20,000 புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக தெரிவித்துள்ள முன்னாள் கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் அதற்கு அமெரிக்காவின் உதவிகளையும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கும் இலங்கைக்கான அமெரிக்க பதில் தூதுவர் அன்று சீமானுக்கும் இடையில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் வேண்டுகோள விடுத்தார். இந்தச் சந்திப்பின் போது அமைச்சர் றிசாத் பதியுதீன தெரிவிக்கையில், இலங்கையின் நுகர்வு பொருட்களை அமெரிக்க கொள்வனவு செய்துவருகின்றது. இலங்கையின் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 2 பில்லியன்களாகும் அந்த வகையில் தைத்த ஆடைகளே அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இன்னும் இலங்கையில் அமெரிக்காவின் முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை செய்வதற்கான சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது என நம்புவதாகவும் இலங்கையின் எழுத்தறிவு வீதம் ஆசியாவில் முன்னணியில் இருக்கின்றது. தொழிலாளர்களின் உழைக்கும் திறமை மிகவும் உயர்ந்த நிலையில் உள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய ஆறு தையல் தொழிற் பேட்டைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளேன். அதில் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. யுத்தம் இந்த நாட்டில் பெரும் அழிவினை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பெரும் எண்ணிக்கையிலான விதவைகள் வடக்கிலும் கிழக்கிலும் இன்று காணப்படுகின்றனர்.

இவர்களது வாழ்வாதார மேமபாடுகளுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் இந்த தொழிற் போட்டை ஆரம்பிக்கவும் திட்டமிட்டுள்ளேன் என்றும் கூறினார். இது தொடர்பில் அமெரிக்க பதில் தூதுவர் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலுள்ள நட்புறவு மிகவும் முக்கியமானது. எல்லா சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு உதவி செய்யும் எண்ணத்தை அமெரிக்கா கொண்டுள்ளது. அமைசசரின் அழைப்பின் பேரில் அமெரிக்க முதலீட்டாளர்கள் மற்றும் வியாபார சமூகத்தை இலங்கைக்கு அழைத்துவர நாம் நடவடிக்கையெடுக்கவுள்ளோம். அதேபோல் இலங்கையின் புதிய தொழில் வாய்ப்புக்களுக்கு அமைச்சர் றிசாத் பதியுதீன் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு எமது ஒத்துழைப்பினை வழங்குவதாகவும் அமெரிக்க பதில் தூதுவர் கூறினார். அதேவேளை, இரு தரப்பு வர்த்தக உடன்படிக்கை தொடர்பிலும் இரு தரப்பு சந்திப்புக்களை எதிர்காலத்தில் எற்படுத்தவும் இதன்போது இணக்கம் காணப்பட்டது. இந்தச் சந்திப்பின் போது ஏற்றுமதி அபிவிருத்திச்சபையின் தலைவர் பந்துல எகொடகே உள்ளிட்ட அதிகாரிகளும் இதன் போது கலந்துகொண்டனர்.

# தொழில்நுட்ப ஆய்வுகூடம் இன்று திறப்பு


(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய தொழில் நுட்ப ஆய்வு கூடத் திறப்பு விழா இன்று இடம் பெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் தா.கணேசபாலேந்திரன் தலைமையில் மு.ப 10 மணிக்கு இத் திறப்பு விழாவிற்கு வடமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆய்வு கூடத்தினை திறந்து வைக்கவுள்ளார். (இ)

## தூய அரசியலுக்கான பயணம் வடக்கில்

# தகுதியான வேட்பாளர்களை நியமிக்கக் கோரிக்கை



தூய்மையான அரசியலுக்கான மார்ச் 12 பிரகடனத்துக்கு 10 இலட்சம் மக்களின் கையொப்பங்களை பெற்றுக்கொள்ளும் வாகனத் தொடரணி நேற்று யாழ்.சாவகச்சேரி வந்தடைந்தது.

பவ்ரல் அமைப்பு 21 பொது அமைப்புகளின் பங்களிப்புடன் இந்த மார்ச் 12 பிரகடனம் தயாரிக்கப்பட்டது.

கொழும்பு சுதந்திர சதுர்க்கத்திலிருந்து ஆரம்பமாகிய பிரகடன ஊர்வலம் நேற்று பிற்பகல் சாவகச்சேரி நகரை வந்தடைந்தது.

இதன் போது பெருந்திரளான மக்கள் திரண்டு தமது கையொபபங்களை இட்டு தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

இதேவேளை மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

தூய்மையான அரசியலுக்கான மார்ச் 12 பிரகடனமானது எதிர்வரும் தேர்தலில் அரசியல் கட்சிகள் தகுதியுடைய வேட்பாளர்களுக்கே இடமளிக்க வேண்டும் என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டதாகும்.

# ஊடகக் கற்கை நெறி ஊடகப்பயிற்சி மையத்தில்

(யாழ்.நிருபர்)

வெகுஜன ஊடக அமைச்சின் கீழ் இயங்கும் ஊடகப்பயிற்சி நிறுவனம் புதிய தொடர் ஊடகக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந் நிறுவனத்தினால் தொடர் ஊடங்களில் தேர்ச்சி பெற விரும்பியவர்களை மையப்படுத்தி தொலைக் காட்சி, வானொலி, பத்திரிகை, இணையத்தள ஊடகங்கள் திரைப்படத் தயாரிப்பு ஆகியவற்றில் தொழில் ரீதியான கற்கையும் செயன்முறைப் பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

இக் கற்கை நெறியைத் தொடர விரும்புவோர் தாம் விண்ணப்பிக்க விரும்பும் கற்கைநெறி, பெயர், வயது, கல்வித்தராதரம் ஊடகத்துறை அனுபவம், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் முகவரி ஆகிய விபரங்கள் உள்ளடங்கிய விண்ணப்பப் படிவத்தை முத்திரை ஒட்டப்பட்ட முகவரி எழுதிய ஜூலை 10 ஆம் திகதிக்கு முன் SLMTI, No,100ASrilanka Foundation Mawatha, Colombo - 07 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும். (10)

# யாழ். தேர்தல் மாவம்டத்தில் ஆசன பங்கீட்டில் இழுபறி

## கூட்டமைப்புக்குள் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

பொதுத் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் தமக்கு ஏழு ஆசனங்கள் தரப்பட வேண்டும் என திருமலையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கூட்டமைப்புக்குள் புதிய குழப்பத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது.

பொதுத் தேர்தலுக்கான ஆசன ஒதுக்கீட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிடையே இதுவரையில் இறுதி முடிவு எட்டப்படாத போதிலும், யாழ்ப்பாணத்தில் தமிழரசுக்கட்சிக்கு 6 ஈ.பி.ஆர்.எப்.எப். அமைப்புக்கு இரண்டு, ரெலோ, புளொட் என்பனவற்றுக்கு ஒவ்வொன்றையும் வழங்குவது தொடர்பில் இறுதியாகப் பேசப் பட்டிருந்தது.

இந்த நிலையில் திருமலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மாநாட்டில், தமிழரசுக் கட்சிக்கு ஏழு ஆசனங்களும் ஏனைய கட்சிகளுக்கு தலா ஒவ்வொரு ஆசனங்களும் ஒதுக்கப்பட வேண்டும் என்ற யோசனை கட்சி உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும், தமது கட்சிக்கு இரு ஆசனங்கள் தரப்பட வேண்டும் என ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்திவரும் நிலையில், தமிழரசுக் கட்சியின் இந்தத் தீர்மானம் குழப்ப நிலையை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளையில், வன்னியில் தமக்கு மூன்று ஆசனங்களும், மட்டக்களப்பு, திருமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தலா ஐந்து ஆசனங்களும் தரப்பட வேண்டும் என தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பணிப்பெண்களுக்கு பயிற்சி

# போதனாசிரியர்களிடம் விண்ணப்பம் கோரல்

வீட்டுப்பணி சார்ந்த மற்றும் அவ்வாறான பணி சாராத பாட நெறிகளை போதிக்கக் கூடிய போதனாசிரியர்கள் மற்றும் பயிற்சிப் போதனாசிரியர்களிடமிருந்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

தமிழ், சிங்கள மொழிகளில், சிங்கப்பூர், கொங்கொங் போன்ற நாடுகளில் வீட்டுப் பணியாளர்கள் பணி உதவியாளர்கள் பாட நெறிகளைக் கற்பிப்பதற்காக இப் போதனாசிரியர்களை இணைத்துக் கொள்ளவிருப்பதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

விண்ணப்பதாரி மொழி, கணிதம் உட்பட க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்திருப்பதுடன் மேற்குறித்த பணியில் 4 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக வெளிநாடொன்றில் சேவையாற்றியிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் கா.பொ.த சாதாரணதரத்தில் மனையியல் விஞ்ஞானம், அழகுக்கலை, சமையல் கலை மற்றும் பராமரிப்பாளர் பாடநெறியை கற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும் எனவும் பணியகம் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்புவோர் அடுத்தமாதம் 14 ஆம் திகதிக்குமுன் பிரதிப்பொது முகாமையாளர், இலங்கை வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகம், 234 டென்கிப் கெபபேகடுவ மாவத்தை, கொல்வத்த பத்ர முல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

# திருமறைக் கலைத் தேர்வு கோரப்படுகிறது விண்ணப்பம்

யாழ். மறைக்கல்வி நடுநிலையம் நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கான கத்தோலிக்க திருமறைக் கல்வித்தேர்வு 2015 இற்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

கத்தோலிக்க மாணவர்களின் மதம் சார்ந்த விழுமியங்கள் மற்றும் அறிவினைப்பெருக்கி ஆக்கத்தை உயர்த்தி சமுதாயத்துடன் இணைந்து வாழக் கூடிய நற்பிரஜைகளாக உருவாக்குவதற்கு ஏற்றவகையில் இப்பரீட்சை தரம் 3 முதல் தரம் 11 வரையான மாணவர்களிடையே நடாத்தப்படவுள்ளது.

இத்தேர்வுக்குத் தேற்றவுள்ள மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னதாக தமது பாடசாலை அதிபர் ஊடாக யாழ். மறைக்கல்வி நடுநிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# சில்லாலைக்கு பஸ்சேவை

(யாழ். நிருபர்)

வலி.தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சில்லாலை கிராமத்திற்கு இலங்கை போக்குவரத்துச்சபை பஸ் சேவையை மீளவும் ஆரம்பிக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1969 ஆம் ஆண்டு முதல் சில்லாலை கிராமத்திற்கு 791 இலக்க வழித்தடத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் சேவை நடைபெற்று வந்தது.

அதன் பின்னர் ஏற்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டிருந்த இச்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் வீதிகள் புனரமைக்கப்படாமையால் இடைநிறுத்தப்பட்டது.

தற்போது வீதிகள் மீண்டும் புனரமைக்கப்பட்டு செப்பனிடப் பட்டுள்ள நிலையில் மீண்டும் பஸ்சேவையை ஆரம்பிக்குமாறு சில்லாலை பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளன

# பரீட்சையை குறுக்கீடு செய்யும் தேர்தல் ஆசிரியர் சங்கங்கள் கண்டனம்

எதிர்வரும் ஓகஸ்ட் 17ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதால், க.பொ.த உயர்தரத் தேர்வு இரண்டு கட்டங்களாக நடாத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ காரியவசம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிப்பு வெளியானதை அடுத்து, கல்வி அமைச்சும் பரீட்சைத் திணைககளமும் இந்த முடிவை எடுத்துள்ளன.

இதன்படி ஏற்கனவே திட்டமிட்டபடி, ஓகஸ்ட் 04 ஆம் திகதி க.பொ.த உயர்தரத் தேர்வு ஆரம்பமாகும். 13ஆம் திகதி வரை இடம்பெறும். அதையடுத்து நாடாளுமன்றத் தேர்தலுக்காக இடைவேளை விடப்படும்.

மீண்டும், இரண்டாம் கட்டமாக ஓகஸ்ட் 24ஆம் திகதி தேர்வு ஆரம்பமாகி செப்ரெம்பர் 08ஆம் திகதி நிறைவடையும்.

எனினும். 5ஆம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் தேர்வு ஏற்கனவே திட்டமிட்டபடி, ஓகஸ்ட் 23 ஆம் திகதி நடைபெறும என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, க.பொ.த உயர்தரத் தேர்வை இரண்டு கட்டங்களாக நடத்த எடுக்கப்பட்ட சங்கங்கள் கடும் அதிருப்தியும் கவலையும் வெளியிட்டுள்ளனர்.

இது மாணவர்களுக்கு உளரீதியான பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், அவர்களின் வாழ்க்கையுடன் அரசாங்கம் விளையாடுவதாகவும், இலங்கை ஆசிரியர் சேவை தொழிற்சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலினும், தேர்தல் பரபபுரைகளால் மாணவர்கள் இயல்பான சூழலில் தேர்வுக்கு படிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ள

# கல்வி டிப்ளோமா கற்கை விண்ணப்பிக்க வாய்ப்பு

(யாழ். நிருபர்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகம் பட்டமேற்கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கற்கை நெறியைத் தொடர விரும்பும் தகுதியான விண்ணபதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கல்லக்கழகம் ஒன்றில் குறைந்தது மூன்று வருட காலத்தைக் கொண்ட இளமாணி பட்டம் பெற்றவராகவும் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் சேவையில் உள்ள ஆசிரியராக, அதிபராக, ஆசிரிய ஆலோசகராக, ஆசிரியர் கல்வியியலாலராக [illegible] நிலைய முகாமையாளராக இருத்தல் வேண்டும். 2014.06.30 இற்கு முன்னர் நியமனம் பெற்றவராகவும், நியமனம் பெற்ற தினத்திலிருந்து தொடர்ச்சியாக சேவையில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

பிராந்திய கற்கை நிலையங்களில் ரூபா 1000 பணமாக செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். www.ou.ac.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவும் விண்ணப்ப் படிவங்களை online இல் சமர்ப்பிக்க முடியும் கட்டணங்கள் கடன் அடிப்படையில் Debit/credit card மூலம் online இல் செலுத்த முடியும். (10)

**(11) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க**

கரடிகள் மலைகளிலும் காடுகளிலும் வாழ்கின்றன இவை இரவில் மட்டுமே நடமாடும் கரடிகள் சுமார் ஆறு அடி உயரம் வரை வளர்கின்றன பெரும்பாலும் தாவரங்களையும் காய்களையும் உண்ணுகின்றன கரடிக்குப் பார்வை சற்றுக் குறைவு ஆனால் கேட்கும் திறன் அதிகமாக இருக்கும் கரடிகள் தேனையும் தேனீக்களையும் விரும்பி உண்ணுகின்றன

51. கரடிகள் பெரும்பாலும் எப்பகுதியில் வாழ்கின்றன?

..........................................................................................

52. கரடிகள் சுமார் எத்தனை அடி உயரம் வரை வளரும்?

..........................................................................................

53. கரடிக்கு மிகவும் அதிகமாகக் காணப்படும் திறன் யாது?

..........................................................................................

54. பார்வை குறைபாடுள்ள மிருகம் யாது?

..........................................................................................

55. தேனை விரும்பியுண்ணும் விலங்கு எது?

..........................................................................................

**(12) கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடையெழுதுக**

56. சூரிய ஒளி ஒன்றில் காணப்படும் நிறங்கள் எத்தனை? ..............................

57. மிக வேகமாக ஓடக்கூடிய பிராணி எது? ..............................

58. இசைக்கருவிகள் நான்கு வகைப்படும் அவை எவை?

1. ..............................　　2. ..............................

3. ..............................　　4. ..............................

59. உயிரினங்களில் அதிக ஆண்டு வாழும் பிராணி எது? ..............................

60. ஐம்பது ரூபாய் காகதத்தாளின் நிறம் யாது? ..............................

61. இலங்கையில் தலதாமாளிகை அமைந்துள்ள இடம் எது? ..............................

62. சுவரில் அடித்த ஆணியைக் கழற்ற ஏற்ற உபகரணம் எது? ..............................

63. "கற்பகத்தரு" என அழைக்கப்படும் மரம் எது? ..............................

64. பூனை, நாய் என்பன கடிப்பதால் ஏற்படும் நோய் யாது? ..............................

65. சுனாமி அலைத்தாக்கம் எந்த ஆண்டில் இடம் பெற்றது? ..............................

**(13) பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக**

66. "டங் டங் சத்தம் பார் ஆலையிலே" என்னும் பாடல்

1) தொழிற்பாடல்
2) அருவி வெட்டுப்பாடல்
3) கும்மிப்பாடல்
4) தாலாட்டுப்பாடல்

**நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (01)-01. 1 | 02. 4 | 03. 1 | 04. 1 | 05. 1 | 06. 1 | 07.3 |
| 08.4 | 09.1 | 10.1 | 11.2 | 12.1 | 13.2 | 14.1 |
| 15.4 | 16.1 | 17.3 | 18.4 | 19.3 | 20.1 | 21.1 |
| 22.4 | 23.1 | 24.1 | 25.1 | 26.1 | 27.1 | 28.1 |
| 29.3 | 30.2 | 31.2 | 32.1 | 33.3 | 34.2 | 35.3 |
| 36.3 | 37.2 | 38.3 | | | | |

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



**தரம் - 3 பரீட்சை முன்னோடி - 2015**

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

**(01)** பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக

வண்ணக்கிளிபோல் பறந்திட ஆசை!
வானத்து நிலவாய் ஒளிதர ஆசை!
கன்னல் தமிழைக் கற்றிட ஆசை !
கடலில் மீனாய் நீந்திட ஆசை !

மலர்களைப்போல் மணந்தர ஆசை !
மலை மேல் மலை மேல் ஏறிட ஆசை !
தளர்வோர்க்கென்றும் உதவிட ஆசை !
தாய் போல் அன்பைப் பொழிந்திட ஆசை !

கடமையை உணர்ந்து செயற் பட ஆசை!
கடின உழைப்பால் வென்றிட ஆசை !
மடமையைக் கொழுத்த மனதினில் ஆசை !
மனிதனாய் வாழ்ந்து புகழ் பெற ஆசை

01. இப்பாடலில் இருந்து நீர் விரும்பும் ஆசைகள் இரண்டினை எழுதுக?

1. ..............................

2. ..............................

02. அன்பை எவ்வாறு பொழிய ஆசை?

..............................

03. மனதில் எதைக் கொழுத்த ஆசை?

..............................

04. எவ்வாறான தமிழைக்கற்றிட ஆசை?

..............................

05. ஆசை என்பதன் ஒத்த சொல் தருக? ..............................

06. ஆசை என்பதன் எதிர்ச்சொல் தருக? ..............................

07. வண்ணம் என்பதன் ஒத்தசொற்கள் இரண்டினை எழுதுக

1. ..............................　　2. ..............................

**(02)** பின்வரும் சொற்களைக் கொண்டு வசனம் எழுதுக

08. வாணம் :- ..............................

09. வானம் :- ..............................

10. உமது எதிர்கால இலட்சியம் என்ன? ..............................

**(03)** கீழே உள்ள அட்டவணையில் எழுத்துக்களும் இலக்கங்களும் தரப்பட்டுள்ளன. இதனைப்பயன்படுத்தி அடைப்புக்கள் தரப்பட்டுள்ள இலக்கத்திற்குரிய சொற்களை எழுதி கருத்துள்ள வாக்கியங்கள் ஆக்குக

| | | | |
|---|---|---|---|
| 1. மலரும் | 2. தருமம் | 3. மரம் | 4. இட்டு |
| 5. நிழல் | 6. ஐயம் | 7. பூக்கள் | 8. |
| 9. காலையில் | 10. காக்கும் | 11. உண் | 12. தலை |

11. (6) (4) (11) ................................................

12. (2) (12) (10) ................................................

13. (7) (9) (1) ................................................

(04) 14ஆம், 15ஆம், 16ஆம் , 17ஆம் வினாக்களுக்குரியது

தரப்பட்டுள்ள தாவர இலைகளின் பெயர்களை எழுதுக
(தாமரை, மிளகு, நொச்சி, பாகல்)


14. .......................


15. .......................


16. .......................


17. .......................

(05) பின்வருவன சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்பினுள் எழுதுக

18. இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ளது ( )

19. முட்டை, பால் என்பன நிறையுணவல்ல ( )

20. ஆனைக்கும் அடி சறுக்கும் என்பது பழமொழியாகும் ( )

21. நாம் பாதையைக் கடக்கும் போது வீதி ஒழுங்குகளைப் பின்பற்றத் தேவையில்லை ( )

(06) பின்வரும் அறிவுறுத்தலை அவதானித்து கீழே கேட்கப்பட்டுள்ள 22ஆம், 23ஆம், 24ஆம், 25ஆம் வினாக்களுக்கு விடையளிக்க

| | |
|---|---|
| நாய் | ஆடு |
| கோழி | மாடு |
| முயல் | பருந்து |

22. இறைச்சியை மட்டும் உணவாக பெறுவதற்கு வீட்டில் வளர்க்கப்படும் விலங்கு ................................................

23. காவலுக்குத் தோழன் அவன் யார்? ................................................

24. பாலையும், இறைச்சியையும் பெறும் விலங்குகள் இரண்டு தருக?
1. ........................ 2. ........................


25. கோழியின் எதிரிப்பிராணி எது? ................................................


(07) இடைவெளியில் வரவேண்டிய எண்களை எழுதுங்கள்


26. [400] + [..........] + [8] = 438

27. [200] + [70] + [..........] = 270

28.













1. 9
2. 18
3. 3



29.













1. 60
2. 40
3. 38

30.





1. 12
2. 6
3. 8

31.



பென்சிலின் நீளம் -........................ cm.

32. 105 மாம்பழங்கள் மூவரிடையே பகிரப்பட்டால் இருவருக்குக் கிடைக்கும் பழங்கள் எத்தனை?
................................................

(08) பொருத்தமான சொல்லை இடைவெளியில் வைத்து நிரப்புங்கள்

(அசுத்த, பனிக்கட்டி, பால்மா பேணி, நாணயம், பந்து, தேங்காயெண்ணை, தார்க்கறை, வீட்டு ஈ)

33. நீர் உள்ள குவளையில் போட்டவுடன் மிதக்கக்கூடிய திண்மம் ........................ ஆகும்

34. கொலரா நோய் ........................ நீரினால் ஏற்படுகின்றது

35. மண்ணெண்ணையின் மூலம் ........................ கறையை கழுவலாம்

36. உருளை வடிவான திண்மப்பொருள் ........................ ஆகும்

37. ........................ போன்ற அமைப்புடையது பூமி

38. தென்னை மரத்திலிருந்து ........................ பெறப்படுகின்றது

39. கிரிக்கெட் விளையாட்டின் ஆரம்பத்துடுப்பாட்டத்தினை நிர்ணயிப்பது ........................

40. கொலரா, நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்களை உண்டாக்கும் ........................

(09) 41 - 47 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

41. பன்னீர் செய்யப்படும் பூ (மல்லிகை, றோசா, கானேசன்)

42. எண்ணெய் செய்யப்படும் வித்து (எள், குரக்கன், நெல்)

43. வானொலியைக் கண்டுபிடித்தவர் (ஆபிரகாம் லிங்கன், கிரகம்பெல், மார்க்கோனி)

44. அதிகாலையில் நடமாடும் பிராணி (குயில், நுளம்பு, காகம்)

45. புற்களை சிரட்டையினால் மூடிவைத்து சில நாட்களின் பின் பார்த்த போது புற்கள் (புற்கள் கடும் பச்சை நிறமாக காணப்படும்), (புற்கள் வெளிறிக்காணப்படும் ), (புற்கள் மஞ்சள் நிறமாகக் காணப்படும்)

46. எரிபொருள் செலவின்றி கடலில் பயணம் செய்ய உதவும் வாகனம் (கட்டுமரம், கப்பல், விசைப்படகு)

47. நீரில் நன்றாக கரையாத பொருள் எது? (நீலத்தூள், சவர்க்காரம், கிறிஸ்)

(10) "நீரை வீண் விரயம் செய்யாதீர்கள" என்ற தலைப்பில் மூன்று அறிவுரைகளை நான்கு சொற்களுக்குக் குறையாத மூன்று வசனங்களில் எழுதுக

48. ................................................

49. ................................................

50. ................................................

# மிருசுவில் படுகொலை நடந்தது என்ன?

## சாட்சியின் பகிர்வு

**நானும் எனது வீட்டாரும் தனியே செல்வதை மறுத்து வெள்ளைக்காரரோ அல்லது ஈ.பி.டி.பி யோ வந்தால் வருவதாகக் கூறினேன் அதன் பின் ஈ.பி.டி.பி கரவெட்டிமேற்கு கிராம சேவையாளர், அம்மா, அப்பா ஆகியோரை அழைத்துக் கொண்டு நேரே சம்பவம் நடந்த மிருசுவில் பாமிற்கு கூட்டிச் சென்றனர்.**

என்னை ஆமி திரத்தினார்கள் அப்படி ஓடிய பொழுது வேலியில் தொப்புத் தொப்பென சப்பாத்துக்கள் நிலத்தில் அடிக்கும் சத்தம் கேட்டது. நான் திரும்பி ஆமிப்பொயின்ட் பக்கமாகஓடி பாதையைக் கடந்து காட்டு வழியால் ஓடி அன்ரி வீட்டுக்கு அருகில் சென்ற பொழுது நாய் குரைத்தது நான் அன்ரி வீட்டுக்கு செல்லும் போது ஜட்டி மட்டும் அணிந்திருந்தேன். நான் அன்ரி வீட்டுக்குப் போகும் போது அன்ரியும் அன்ரியின் பிள்ளைகள் இருவரும் அம்மாவும் இருந்தனர். நான் அன்ரியிடம் சாறம் கேட்டு வாங்கினேன். அதன் பின் சில பேரை ஆமி சாக்கொண்டு போட்டார்கள் இங்கே இருக்க வேண்டரம் என அன்ரியிடம் கேட்டேன் றோட்டைக்கடந்து ஆட்கள் இல்லாத வீட்டுக்குச் சென்றோம் அன்றிரவு நானும் அன்ரியும் அம்மாவும் பிள்ளைகளும் அந்த வீட்டில் இருந்தோம் அன்ரி சித்தப்பா எங்கு என்று கேட்டபோது சித்தப்பாவின் பிள்ளைகளை கூட்டிச் சென்றதாக சொன்னார். அவர்கள் அப்போது பாமிற்குச் செல்ல முயன்றார்கள் நான் விடவில்லை. அன்ரி வீட்டுக்கு இரவு 7.30, 8.30 மணிக்குச் சென்றேன். மற்ற வீட்டுக்குச் சென்றது 8; 8.30 மணி இருக்கும் நான் மிகவும் வேதனையுடன் இருந்ததால் படுத்துவிட்டேன். அன்ரி அந்த. இடத்திற்குச் செல்ல வேண்டுமென கரைச்சல் கொடுத்தார்கள். நான் காலையில் செல்வோம் எனக் கூறினேன். என்னைக் காலை 6 மணிக்கு எழுப்பினார்கள். காலையில் அன்ரி என்ன செய்யப்போகிறாய் எனக் கேட்டார். நான் முடியாவிட்டாலும் கரவெட்டிக்குச் செல்லப் போவதாகக் கூறிப் புறப்பட்டேன். அவர்கள் பாமிற்குள் சித்தப்பாவை தேடிச் சென்றார்கள். மணியத்தின் 15 வயதுடைய மகனைச் சந்தித்தேன். அவரிடம் எனக்குக் காச்சலாக இருக்கிறது கொடிகாமத்திற்குக் கொண்டுசென்று விடுவாயோ என கேட்டு அவனுடன் சைக்கிளில் இருக்க முடியாத நிலையில் பின்னுக்கு இருந்தபடி கொடிகாமம் நோக்கி வந்தேன். நான் வரும் போது மிருசுவில் செக் பொயின்ரால் வந்தேன். அந்த இடத்தில் எங்கே போகிறாய் என விசாரித்தார்கள். நான் வழமைபோல் பாண் வாங்கச் செல்வதாகக் கூற அவர்கள் போகச் சொல்லிவிட்டார்கள். நான் கொடிகாமத்திற்கு வந்து காலை 6.45 மணியளவில் கொடிகாமத்தில் சந்தைக்கருகில் உள்ள கடையில் சைக்கிள் நிறுத்தும் இடத்தில் நின்றேன்.

எனது தந்தையை எதிர்பார்த்து நின்றேன். அப்பா காலை 7 மணியளவில் வந்தார். அந்த நேரம் அப்பா மிருசுவிலில் உள்ள எங்கள் வீட்டிற்குச் செல்வதற்காக வந்தார். அப்பாவை சைக்கிளைத் திருப்புங்கோ கரவெட்டி வீட்டை போவம் என்று சொல்லி சைக்கிளில் செல்லும் போது சம்பவம் பற்றி அப்பாவிடம் கூறினேன். அப்பா என்னிடம் யாக்கிரை பொயின்ரில் அடையாள அட்டை விசாரித்தால் துலைந்துவிட்டது நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு கொடுப்பதற்கு செல்வதாகக் கூறும்படி அறிவுறுத்தினார். பொயின்ரில் நாம் இறங்கி நடந்து கொண்டு போனபோது கண்கள். வீங்கியும் சோர்ந்தும் இருந்த என்னைக் கண்ட இராணுவத்தினர் அப்பாவிடம் விசாரித்தபொழுது நான் எனக்கு காச்சல் என அவர்களுக்குக் கூற சைக்கிளில் ஏற்றிச்செல்லுமாறு பணித்தார்கள். நான் காலை 8 மணியளவில் வீட்டிற்குச் சென்றேன். வீட்டிற்குப் போனபோது அம்மா இருந்தா. அவரிடம் பாயைக் கொண்டுவரச்சொல்லிப் படுத்து விட்டேன். அந்தநேரம் அம்மா என்னை ஒன்றும் கேட்கவில்லை. அப்பா விபரத்தை அம்மாவுக்குச் சொன்னார். அம்மாவும் அப்பாவும் நெல்லியடி



ஈ.பி.டி.பி காரியாலயத்துக்குச் சென்றனர். அத்துடன் கூடிவந்த ஆட்களின் வீடுகளுக்கும் செல்ல சென்றுவிட்டனர். எனக்கு மூச்சு எடுக்க இயலாது இருந்த பொழுது ஈ.பி.டி.பி வாகனம் வந்து என்னை ஏற்றி அவர்களின் காரியாலயத்திற்கு கொண்டுசென்றார்கள். அப்பொழுது நேரம் மு.ப 11 மணி இருக்கும். அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றார்கள். ஆஸ்பத்திரியில் என்னை வாட்டில் விட்டார்கள். அப்பா என்னுடன் நின்றார் அம்மா ஐ.சீ.ஆர்.சிக்கு முறையிடச் சென்றார். எனக்கு உள்நோக்கள் தான் ஏற்பட்டிருக்கிறது என கூறி தமிழ் வைத்தியம் செய்யுமாறு அறிவுறுத்தி குளிசைகள் தந்து 21.12.2000 தினம் துண்டு வெட்டி வீட்டிற்கு அனுப்பினார்கள்.

நான் விட்டிற்குப் போன சமயத்தில் ஈ.பி.டி.பி அலுவலகத்திற்கு துண்டு வெட்டிய விடயத்தை அவர்களுக்கு அறிவித்து விட்டு வீட்டிற்குச் சென்றேன். வீட்டில். இருந்த சமயத்தில் செஞ்சிலுவைச். சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் எனது கரவெட்டி மேற்கில் உள்ள வீட்டிற்கு வந்தார். வந்த பொழுது நேரம் காலை 9.00, 10.00 மணி இருக்கும். பிரதிநிதி வந்து நடந்த சம்பவத்தைப் பற்றி என்னிடம் கேட்டு விசாரித்துக் குறிப்பெடுத்துக் கொண்டனர்.

அச் சமயத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் எமது விட்டிற்கு அருகில் வந்து நின்றன. அதில் இராணுவத்தினர் வந்ததாக அறிந்தேன். இராணுவத்தினரைக் கண்ட போது வீட்டிலிருந்தவர்களும் அயலவர்களும் குழறினார்கள்.அச்சமயத்தில் யாரோ ஒருவர் நெல்லியடியிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்திற்கு தகவல் கொடுத்ததன் பேரில் ஈ.பி.டி.பி அமைப்பினரும் எமது வீட்டிற்கு வந்தனர்.சம்பவம் பற்றி என்னிடம் விசாரித்துக்கொண்டிருந்த ஐ.சீ.ஆர்.சீ இன் பிரதிநிதி எம்மையெல்லாம் பயப்பிடாமல் அமைதியாக இருக்கும் படி கூறிவிட்டு வெளியே சென்று விசாரித்து விட்டு திரும்பி வந்து மிருசுவில் கொமாண்டர் வந்திருப்பதாகவும் நடந்த சம்பவம் பற்றி என்னை விசாரிக்க வந்திருப்பதாகவும் கூறினார். ஐ,சீ. ஆர்.சீ பிரதிநிதி என்னிடம் வாக்கு மூலம் எடுத்து முடித்த பின் மிருசுவில் கொமாண்டர் உங்களை விசாரிப்பார் என்று கூறினார். நான் பயமாக இருக்கிறது என தெரிவித்த போது தானும் உடன் இருப்பதாகத் தெரிவித்தார். பின் இரண்டு இராணுவத்தினர் வீட்டிற்குள் வந்தனர். வந்தவர் தம்மை எமக்கு அறிமுகப்படுத்தி ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் நடந்ததைத் தெரிவிக்குமாறு கேட்டார்.கூட வந்த ஆமி ஒருவர் தமி ழில் மொழிபெயர்த்தார். நான் நடந்த சம்பவங்களை தெரியப்படுத்தினேன். அவர்கள் குறிப்பெடுத்துக் கொண்டனர். 'அதன் பின் ஐ.சீ.ஆர்.சீ. பிரதிநிதியுடன் ஆமிக்காரரும் சென்று விட்டனர். மறுநாள் 22.12.2000 அன்று காலை 9.00 மணியளவில் முதல் நாள் வந்த மிருசுவில் கொமாண்டரும் கே.கே.எஸ். இல் இருந்த வேறு பல சிவப்புத் தொப்பி அணிந்த இராணுவத்தினரும் வீட்டிற்கு வந்தனர். அன்றும் ஈ.பி.டி.பி அலுவலகத்திற்கு அறிவித்து அவர்களும் வந்தார்கள். நாங்கள் கே.கே.எஸ் இல் இருந்து வந்திருக்கிறோம் உங்கள் பிரச்சினைகளைப் பார்ப்பதற்கு வந்திருக்கிறோம் பயப்பட வேண்டாம் மிருசுவிலுக்கு வந்து இடத்தைக் காட்டுமாறு கேட்டார்கள். நானும் எனது வீட்டாரும் தனியே செல்வதை மறுத்து வெள்ளைக்காரரோ அல்லது ஈ.பி.டி.பி யோ வந்தால் வருவதாகக் கூறினேன் அதன் பின் ஈ.பி.டி.பி கரவெட்டிமேற்கு கிராம சேவையாளர், அம்மா, அப்பா ஆகியோரை அழைத்துக் கொண்டு நேரே சம்பவும் நடந்த மிருசுவில் பாமிற்கு கூட்டிச் சென்றனர். பாமிற்கு செல்வதற்கு முன்னர் எனது மிருசுவில் வடக்கு வீட்டிற்கு கூட்டிச் சென்று சம்பவ தினத்தில் அதாவது 19.12.2000 தினத்தில் என்னென்ன எங்கெங்கே நடந்ததோஅவற்றை செய்தும் சுட்டியும் காட்டுமாறு கேட்கப்பட்டேன். நான் அனைத்தையும் காட்டிக் கூறினேன். தொட்டியடி தூக்கியெறிந்த வேலி, மலசலக் கூட குழி என்பவற்றையும் காட்டினேன். மலசல குழி மூடப்பட்டு அதன் மேல் பச்சை தென்னோலை இரண்டு முக்கியமாக இரத்தக் கறையை மறைத்துப் போடப்பட்டிருந்தது. அச்சமயம் இரத்தத்தைக் கண்டதும் நான் நினைவிழந்தேன் நேரம் பி.ப 1.00 மணி அளவில் இருக்கும் அப்பொழுது என்னை அப்பால் அழைத்துச் சென்றனர். அவ்வேளையில் தென்னம் ஓலையை அகற்றி பிற்றைத்திறப்பதை அவதானித்தேன். கொஞ்ச நேரத்தில் எனக்கு அருகில் நின்றவர்கள்என்னை ஒன்றுக்கும் பயப்பிட வேண்டாம் எனக் கூறி என்னை பிற்றுக்கு அருகில் அழைத்துச் சென்றனர்.எனக்கு நடுங்கத் தொடங்கிவிட்டது. இராணுவத்தினர் தெம்பை ஏற்படுத்திக் கொண்டு அவர்களால் திறக்கப்பட்டிருந்த குழியை பார்க்குமாறு கூறினர்நான் பார்த்த பொழுது குழியில் தண்ணீர் இருக்கவில்லை. பெரிய ஆடு அழுகிய நிலையில் உள்ளே காணப்பட்டது.ஒரே மணமாகவும் இருந்தது. அப்பொழுது அருகில் நின்ற தமிழ் பேசக் கூடிய ஆமி என்ன தம்பி வெட்டிப் போட்டதென்றீர் ஆடுதானே கிடக்குது. வேறொன்றையும் காணவில்லையே எனக் கேட்டார். நான் சத்தியமாக குத்திப் போட்டதைக் கண்டதையும் தண்ணீர் சத்தம் கேட்டதையும் கூறினேன். நான் மலசலகூடத்தின் பின்புறமாக சுவரில் இரண்டு பக்கங்களிலும் தொங்கியபடி சாம்பல் நிற வீட்டு மின் சுற்றுக்களுக்கு பாவிக்கும் நீண்ட வயர் ஒன்றைக் கண்டேன். அதன் வெளிப்பக்கத்தில் தொங்கிக் கொண்டிருந்த முனை முடிச்சுப் போடப்பட்டு காணப்பட்டது.

பின் எம்முடன் நின்ற சிவப்புத் தொப்பி அணிந்த ஆமி சென்று வேறு இரண்டு இராணுவத்தினரை அழைத்து வந்தனர். அவர்கள் வந்தபோது சாதாரணமான பெனியனும் கட்டைக் காற்சட்டையும் அணிந்திருந்தனர். என்னுடன் நின்ற சிவப்புத் தொப்பி அணிந்திருந்த ஆமி இவையளோ உன்னைப்பிடித்வர்கள் என கேட்டார். நான் இல்லை சேர் என்றேன். அவர்கள் சென்ற பின் வேறொரு ஆமி கொண்டு வரப்பட்டார் அவரும் சாதாரணமான பெனி யனும் கட்டை காற்சட்டையும் அணிந்திருந்தார். அவரையும் காட்டி பிடித்தது அவரோ என விசாரித்தனர். நான் இல்லையென்றேன் அதன் பின் இன்னும் இரு ஆமியை கூட்டி வந்தனர் அவர்களும் சாதாரண பெனியனும் கட்டைகாற்சட்டையும் அணிந்திருந்தனர். நான் அவர்களை கண்டவுடன் பயத்தினால் கத்தத் தொடங்கிவிட்டேன். நான் கத்தியதும் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம் இவர்களோ பிடித்து அடித்த ஆட்கள் என்று கேட்க நான் அவையள் தான் ஆரம்பத்தில் பிடித்து அடித்த ஆட்கள் என்று கூறினேன் பின்பு என்னை தூரத்திற்க கூட்டிச்சென்றனர் அதன் பின் இரண்டு சிவப்புத்தொப்பி அணிந்த ஆமிகள் என்னையும் அப்பாவையும் கிராமசேவகரையும் ஈ.பி.டி.பி ஒருவரையும் ட்ரக் விட்டிருந்த இடத்திற்கு கூட்டிவந்தனர் அம்மாவை சம்பவம் நடந்த இடத்திற்கு கூட்டிச்செல்லாது ட்ரக்டியில் விட்டிருந்தனர். அதன் பின் எங்களை ஒரு ட்ரக்கில் ஏற்றி மிருசுவில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தனர். வேறு சில தொப்பி அணிந்த இராணுவத்தினர் சம்பவம் நடந்த இடத்தில் நின்றிருந்தனர். ஆஸ்பத்திரியில் சோடா, மதியசாப்பாடு தரப்பட்டது. அங்கே கனநேரம் வைக்கப்பட்டிருந்தேன் அங்கு வைத்து சிவப்புத்தொப்பி அணிந்திருந்த இராணுவத்தினர் என்னிடம் விசாரித்து பதிவுகளை செய்திருந்தனர் அதன் பின்னர் திரும்பவும் ரக்கில் ஏற்றி ஆசைப்பிள்ளை ஏற்றம்வழியாக அம்மாவை தவிர்த்து ஏனையவர்களை கூட்டிச்சென்று மலசலகூடம் குழியடியில் வைத்து என்னையும் இரத்தம் தோய்ந்த குழியையும் படம் எடுத்தனர்.

(தொடரும்)...

## கன்னியாகுமரியில் வெள்ள அபாயம்

தமிழகம் கன்னியாகுமரி மாவட்டத்தில் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் தென் மேற்கு பருவ மழையால அணைகள் நிரம்பியதை தொடர்ந்து வெள்ள அபாய எசசரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கரையோர பகுதி மக்களுக்கு விடுக்கபட்ட வெள்ள அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலிலுள்ளது.

இநநிலையில், மழை தொடர்ந்து பெய்து வருவதால், அணைகளிலிருந்து எந்நேரமும் நீர் திறந்து விடலாம் என்ற எதிர்பார்ப்பில் ஆற்று கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் வெளியேறி வருகின்றனர்.

# ஆபிரிக்க ஒன்றிய படைமுகாம் மீது சோமாலியாவில் தாக்குதல்

## பான்கீமூன் கண்டனம்



சோமாலியாவில் உள்ள ஆபிரிக்க ஒன்றியத்தின் இராணுவ முகாம் மீது கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பான் கீன் மூன் கண்டித்துள்ளார்.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்த புருண்டி நாட்டின் அமைதிப் படையினருக்கு அறிக்கை ஒன்றில் அவர் அஞ்சலி தெரிவித்திருக்கிறார். இதில் உயிரிழந்தவர்களுக்கு ஐரோப்பிய ஒன்றியமும் தமது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது.

சோமாலியத் தலைநகர் மொகாடிஷுவுடன் பாய்டோ நகரை இணைக்கும் சாலை ஒன்றில் அமைந்துள்ள இந்த இராணுவ தளத்தின் மீது இஸ்லாமியக் குழுவான அல் ஷபாப் மேற்கொண்ட தாக்குதலில் குறைந்தது 50 படையினர் பலியாகியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

முஹமது நபியின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தியமை என்று அல்ஷபாப் குழு வர்ணிக்கும் ஒன்றுக்காக பழி வாங்கும் நோக்கிலேயே இந்தத் தாக்குதலை தாம் மேற்கொண்டதாக அந்தக் குழு தெரிவித்திருக்கிறது.

## தென்கொரியாவில் மேர்ஸ் இதுவரை 32 பேர் பலி

தென் கொரியாவில் மேர்ஸ் நோய் பரவுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இந்நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 32 ஆக அதிகரித்துள்ளது.

ஒட்டுமொத்தமாக இந்நோயால் 182 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ள 15 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் சுகாதார அமைசசகம் தெரிவித்துள்ளது.

இது தவிர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவர்களில் 91 பேர் பூரண குணமாகி வீடு திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2 ஆயிரத்து 562 பேர் தனியான சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டு, தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

# சுற்றுலா விடுதியில் தாக்குதல்; 15 பிரித்தானிய பிரஜைகள் பலி

## டுனிஷியாவில் கோரம்



டுனிஷியாவில் தீவிரவாதிகளால் சுற்றுலாப் பயணிகள் விடுதியொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 15 பிரித்தானியர்கள் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் மொத்தம் 39 பேர் உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள் தொடர்பிலான தகவல்கள் எதுவும் சரியாக வெளிவராத நிலையில், ஒரு சிலரது பெயர்களை மாத்திரம் அவர்களது உறவினர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இச்சம்பவத்தில் பலர் காணாமற் போயுள்ளதோடு, உறவினர்கள் குழப்பமடைந்துள்ளதாக டுனிஷிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, 1000 பிரித்தானியர்கள் ஏற்கனவே நாடு திரும்பியுள்ள நிலையில் இரண்டாயிரத்து 500 பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. டுனிஷியாவிலுள்ள கடற்கரைப் பகுதியிலுள்ள விடுதி அருகே ஆயுததாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 39 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக பிரித்தானிய பிரதித்தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்தச் சம்பவத்தில உயிரிழந்தவர்களுக்கு பிரித்தானிய அரசாங்கம் சார்பில் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது குறித்து ஆராய்வதற்கும், எதிர்கால நடவடிக்கை எடுப்பதற்கும் இரண்டு தனியான குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கனேடிய அமைச்சர் உக்ரைனுக்கு விஜயம்



உக்ரைனுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள கனேடிய பாதுகாப்பு அமைச்சர் (Jason Kenney) ஜசன் கென்னயிற்கும், உக்ரைன் பிரதமர் ஆர்சனி யட்சனியூக்கிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. உக்ரைன் தலைநகர் கிவ்வில் இந்தச் சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் உக்ரைன் - ரஷ்யாவிற்கு இடையிலான மோதல், ரஷ்ய மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடை உள்ளிட்ட பலதரப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. கனேடிய பாதுகாப்பு அமைச்சரின் இந்த விஜயத்தை அடுத்து கிழக்கு உக்ரைனில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு நேட்டோ தமது படையை அளித்து உதவிவழங்கும் சூழ்நிலை ஏற்படுமென உக்ரைன் அரச ஊடகங்கள் எதிர்வு கூறியுள்ளன. கிழக்கு உக்ரைனில் ரஷ்ய படையினருக்கும், உக்ரைன் படையினருக்கும் இடையிலான மோதலில் இதுவரை 6 ஆயிரத்து 400 பேர் உயிரிழந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் வெளியிட்டிருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இடைத்தேர்தலில் பெரும் குளறுபடி

## கனிமொழி சீற்றம்



சென்னை இராதாகிருஸ்ணன் நகரில் இடம்பெற்ற சட்டப் பேரவை தொகுதி இடைத்தேர்தல் ஜனநாயக முறைப்படி நடைபெறவில்லை என திராவிட முனனேற்றக்கழக மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி குற்றம் சுமத்தியுள்ளார். மதுரை திருப்பரங்குன்ற பகுதியில் திராவிட முன்னேற்றக்கழக தலைவர் கருணாநிதியின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக்கழகம் மக்கள் தேவைகளை அறிந்து செயற்படவில்லை எனவும், தமிழ் நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும் குற்றவாளிகள் தமிழ் நாட்டை விட்டு ஓடிவிடுவர் எனக கருத்துக்கள் கூறப்பட்டு வந்த நிலையில், தமிழகத்தில் இடம் பெறும் சட்டவிரோதசெயல்கள் யாரால் நடைபெறுகிறது? எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார.

# பொருளாதார மீட்சித்திட்டம் வாக்கெடுப்புக்கு விட முடிவு

## கிரேக்க அரசின் அதிரடி

சர்வதேச கடன் வழங்குநர்கள் முன்மொழிந்துள்ள பொருளாதார மீட்பு நிதி உடன்படிக்கையை ஏற்றுக்கொள்வதா இல்லைய்ா என்பது தொடர்பான சர்வஜன வாக்கெடுப்புக்கு கிரேக்க பிரதமர் அலக்ஸ் ஸிப்ராஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

ஏற்றுக்கொள்ள முடியாத பொருளாதார மீட்பு நிதி திட்டத்திற்கு தாம் எதிர்ப்பு வெளியிடுவேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த சர்வஜன வாக்கெடுப்பிற்கு அங்கீகாரம் வழங்குவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் நாடாளுமன்ற அமர்வு ஆரம்பித்த பின்னர் தலைநகர் ஏதேன்ஸ்சில் வங்கிகளுக்கு வெளியே நீண்ட வரிசையில் மக்கள் நிற்பதை அவதானிக்க முடிந்ததது.

இந்த வாக்கெடுப்பு நடைபெற்றாலும் எதிர் வரும் செவ்வாய்க்கிழமைக்குள் கிரேக்கத்திற்கான தற்போதைய பொருளாதார மீட்பு நிதியை வழங்க ஐரோப்பிய வலய நிதியமைச்சர்கள் இணங்க வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஸிப்ராஸின் சர்வஜன வூக்கெடுப்பு தீர்மானம் குறித்து கலந்துரையாடுவதற்கென ஐரோப்பிய வலயத் தலைவர்கள் பிரசல்ஸ்சில் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இதேவேளை பிரதமரின் சர்வஜன வாக்கெடுப்பு தீர்மானக்கிற்கு கிரேக்க நிதியமைச்சர் யானிஸ் வரூ.`.கிஸ் ஆதரவு தெரிவித்துள்ளார்.

நாளை 30 ஆம் திகதிக்குள் 1 தசம் 5 பில்லியன் யுரோ கடன்தொகையை கிரேக்கம் மீளச் செலுத்த வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சர்வதேச கடன்வழங்குநர்களான சர்வதேச நாணய நிதியம், மற்றும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுடனான சந்திப்பை அடுத்து சர்வஜென வாக்கெடுப்பு அறிவிப்பை ஸிப்ராஸ் வெளியிட்டிருந்தார்.

கிரேக்கத்திற்கான பொருளாதார மீட்பு நிதித் திட்டத்தை மேலும் ஐந்து மாதத்தால் நீடிப்பதற்கு சர்வதேச நாணய நிதியமும் ஐரோப்பிய ஒன்றியமும் முன்வந்திருந்தன.

இதன்மூலம் 15 தசம் 5 பில்லியன் நிதி விடுவிக்கப்படும் என்ற போதிலும், கிரேக்கம் மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

வியக்கத்தக்க வகையிலான தாராளமான சலுகையை கிரேக்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஜேர்மன் அதிபர் ஏங்கலா மேர்கல் வலியுறுத்தியிருந்தார்.

**சமாதானத்தை...**

இலங்கை அரசாங்கம் - எந்த இலங்கை அரசாங்கமானாலும் சரி - செய்ய வேண்டியது என்ன, எதைப் பின்பற்ற வேண்டும், அதன் புலம்பெயர்ந்தவர்களை எட்டிப் பிடிப்பதற்கான பணியில், ஒரு பொதுவான மையவட்டக் கொள்கை இருக்கவேண்டும். பிரபாகரனின் சக பயணிகள் மற்றும் அவரையோ அல்லது எல்.ரீ.ரீ.ஈ. யினையோ இன்னமும் விமர்சிக்க மறுப்பவர்களை அணுகுவதற்கு முன்னர் அதில் தமிழ் புலம்பெயர்ந்தவர்கள் இடையே உள்ள பிரிவினைக்கு எதிரான சக்திகளுக்கு சலுகைகள் வழங்கப்பட வேண்டும். பேச்சுக்களுக்குப் பின்னர் தங்கள் கொள்கையின் ஒரு தூணாக நிற்பது, அரசாங்கங்கள் உட்பட சர்வதேச சமூகங்களிடையே, போர்க்குற்றம் மற்றும் மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் பற்றிய சர்வதேச விசாரணைக்கு வேண்டி பரப்புரை செய்வதே என்று பெருமையடித்துக் கொள்பவர்களை எந்த அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளக் கூடாது!

வெளிவிவகார அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சு என்பனவற்றின் அடிப்படைப் பணி, எங்கள் தேசிய இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் இலங்கைக்கு எதிரான போர்க்குற்றங்களை விசாரிக்கும்படி பரப்புரைகள் மேற்கொள்ளும் புலம்பெயர் சக்திகளை நிச்சயம் எதிர்த்து, மறுதலித்து, மறுத்துரைத்து தோற்கடிப்பதாகவே இருக்க வேண்டும். இந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் என்கிற பதவியில் உள்ள மங்கள சமரவீர வெளிவிவகாரங்களில் பங்காளிகளாக கை கோர்ப்பவர்களை தெரிவு செய்யும்போது மிகவும் நுட்பத்துடன் தேர்வு செய்யவேண்டும்.

# திட்டமிட்ட மீள்குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டும்

## வடமாகாண சபை உறுப்பினரிடம் கோரிக்கை



(முல்லைத்தீவு)

முறிகண்டி கொக்காவிலில் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட குடியேற்ற முயற்சியையும் தட்டயமலை, வாவெட்டி மலைகளில் நடைபெறும் கருங்கல் அகழ்வையும் நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கையொன்றானது வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த மக்கள் சந்திப்பின்போதே இவ்வாறான கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்று ரவிகரனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் அறியவருகையில், அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் மக்கள் குறைகேள் சந்திப்பொன்று நடாத்தப்பட்டது. மேற்படி சந்திப்பில் கலந்துகொண்ட கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் என்பன தமது பிரதேசத்தில் காணப்படும் குறைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

முறிகண்டிப்பகுதியில் எக்காலத்திலும் வசித்திராத 200 குடும்பங்களை குடியமர்த்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதை தெரிவித்திருந்த மக்கள் அவற்றை தடுத்து நிறுத்துவது தொடர்பான வடமாகாணசபை முதலமைச்சருக்கான கோரிக்கை மனுவொன்றை வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரனிடம் கையளித்தனர்.

மேலும் ஒட்டுசுட்டான் வாவெட்டி தட்டயமலைகளில் தொடரும் கருங்கல் அகழ்வால் தமது வளங்கள் அபகரிக்கப்படுவதை குறிப்பிட்ட மக்கள் இவ்வாறு வெடிவைத்து இரண்டு மலைகளையும் தகர்ப்பதால் அப்பகுதியில் நில அதிர்வுகள் அந்நேரங்களில் ஏற்படுவதாகவும் அம்மலைகளை அண்மித்த இடங்களில் உள்ள வீடுகள் வெடிப்புக்குள்ளாகுவதாகவும் குறிப்பிட்டு அவை தொடர்பான கோரிக்கை மனுவொன்றையும் கையளித்தனர். இது தவிர கிராமத்தின் அத்தியாவசிய தேவைகள் தொடர்பாக பலரும் தமது கருத்துக்களையும் குறைகளையும் முன்வைத்தனர்.

அதன் பின்னர் அவற்றுக்கு பதிலளிக்கும் வகையில் கருத்துத்தெரிவித்த ரவிகரன், திருமுறிகண்டிப்பகுதியில் திட்டமிடப்பட்டதாக குறித்த இடத்தில் எதுவித முன்தொடர்பையும் கொண்டிராத 200 குடும்பங்களை குடியமர்த்தும் முயற்சி தொடர்பான கோரிக்கை மனுவை வடமாகாணசபை முதலமைச்சரிடம் கையளிப்பதாக தெரிவித்தார்.

மேலும் வாள் வெட்டு மலை மற்றும் தட்டயர் மலைகளில் நடைபெறும் கருங்கல் அகழ்வு தொடர்பாக விவசாய நீர்ப்பாசன அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும் குறிப்பிட்டார்.

போரின் பின்னரான காலப்பகுதியில் ஒவ்வொரு பிரதேசத்திலும் தேவைகள் அதிகாகவே உள்ளன. பொருளாதாரக்கட்டமைப்பை பலப்படுத்தி சமூகக் கட்டமைப்புகளை பலப்படுத்தி படிப்படியாக தமிழ் மக்களின் தேவைகளையும் குறைகளையும் களைவதற்கான அபிவிருத்திப்பணிகளை மெல்ல மெல்ல முன்னெடுப்பதே எம் நோக்கமாகிறது. ஒவ்வொரு பிரதேசத்திலும் மக்கள் குறைகளை இவ்வாறான தொடர் மக்கள் குறைகேள் சந்திப்புகள் மூலம் களையப்படும் என்றும் தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் குருபரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் துரவிகரன், பிரதேச செயலாளர் குருபரன், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பஞ்சலிங்கம் மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் உரையாற்றினர்

# தேர்தலின் பின் தேசிய அரசு மாற்றமில்லை என்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

பொதுத்தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் எண்ணம் இல்லையென ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

பொதுத்தேர்தலின் பின்னரும், ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படவே பிரதமர் ரணில் விக்ரமசிங்க விருப்பம் கொண்டுள்ளதாக பிரதியமைச்சரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள கடந்த ஜனவரி மாதம் முதலே ஐக்கிய தேசியக்கட்சி தயாராகவுள்ளதாகவும், புதிய அரசாங்கமானது குறுகிய காலத்தை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சிக்கு மக்களின் ஆதரவு எவ்வாறு இருக்கிறது என்பதை மே தினப் பேரணி நிரூபித்துள்ளதாகவும், கூட்டங்களில் பங்கேற்ற ஆயிரக்கணக்கான கட்சி ஆதரவாளர்கள் கட்சியின் வெற்றியை உறுதி செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.



கட்சியை அடிமட்டத்தில் இருந்து கட்டியெழுப்ப கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளதோடு, அவை தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தலின் பின்னர் நல்லாட்சி என்ற கொள்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படுமென ஐ.தே.க.தலைவரும் பிரதமருமான ரணில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பக்தி இசை அலை

(நயினாதீவு)

நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் சப்பறத் திருவிழா இன்று திருவரஷன் இசைக்குழுவுடன் ஏயார்ரெல் சுப்பர் சிங்கர் வழங்கும் பக்தி இசை அலை எனும் நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஏயார்ரெல் சுப்பர் சிங்கர்களான வர்ஷன் சாய்சரன், கௌசிக், உசாராஜ், அம்ரிதா, கமலராஜா ஆகியோர் பங்குபற்றுவதோடு இந்நிகழ்வானது நயினை நாகபூஷணி அம்மன் மண்டபத்தில் இன்று மாலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ் இசை நிகழ்வில் அனைத்து அடியார்களும் கலந்துகொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (21)

# தேர்த் திருவிழா

தென்மராட்சி மீசாலை சோலை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தில் நாளை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழா இடம்பெறவுள்ளது.

மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது. 2 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு பூங்காவனத்திருவிழாவும் இடம்பெறும்.

அமரர் பொன்னையா சிவகுரு ஞானகார்த்தமாக அமைக்கப்பட்ட சரவணப் பொய்கையில் இம்முறை சுவாமி எழுந்தருளி தீர்த்தமாட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பரீட்சை...**

பவர்கள் ஒலிபெருக்கிகளை பயன்படுத்துவதால் பரீட்சை எழுதும் மாணவர்கள் பாதிக்கப்படுவர். இதனைக்கருத்திற் கொண்டு ஒவ்வொரு அரசியற் கட்சிகளும் செயற்படவேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்

**தேர்தலில் ....**

நிதித்துவத்தை அடைவதற்காக போராடுவோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, பொது பலசேனாவைச் சேர்ந்த பிக்குகளை போட்டியில் நிறுத்தப் போவதில்லை என்றும், தகுதிவாய்ந்தவர்களையே வேட்பாளர்களாக நிறுத்தவுள்ளதாகவும், பொது பலசேனாவின் பொதுச்செயலர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

**கே.பீ.யின்...**

குறித்து பூரண கண்காணிப்பு நடத்தப்பட்டு வருவதாகவும், புலனாய்வு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு புலனாய்வு வலையமைப்புக்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

கடந்த அரசாங்கம் கிளிநொச்சியில் தன்னார்வ தொண்டு நிறுவனமொன்றை ஆரம்பித்து அதனை குமரன் பத்மநாதனிடம் ஒப்படைத்திருந்தது என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பாரியளவிலான சர்வதேச சொத்துக்கள் பற்றிய விபரங்கள் தெரிந்த குமரன் பத்மநாதனை கடந்த அரசாங்கம் ஏன் பாதுகாத்தது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதி வலையமைப்பு செயற்பட்டு வருவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ள நிலையில் ஏன் மகிந்த அரசாங்கம், குமரன் பத்மநாதனை பாதுகாத்தது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எவ்வாறெனினும் தமது அரசாங்கம் குமரன் பத்மநாதன் நாட்டை வெளியேறத் தடை விதித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதன் குறித்து விசாரணை நடத்தி, அனைத்து புலிகளின் சொத்துக்களையும் முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் சர்வதேச சமூகத்துடனான உறவுகளை வலுப்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# நிதிக்குற்றவியல் விசாரணை தொடர்ந்தும் நடைபெறும்

## ஜோன் அமரதுங்க தெரிவிப்பு

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட போதிலும் நிதிக்குற்றவியல் விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், நிதிக் குற்றவியல் விசாரணை பிரிவின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.

ஏன் சில அரசியல்வாதிகள் கைது செய்யப்படவில்லை என மக்கள் கேள்வி எழுப்புவதாகத் தெரிவித்துள்ள அவர், ஊழல் மோசடிகள் குறித்து உறுதியான ஆதாரங்கள் காணப்பட்டால் அவர்களை கைது செய்ய முடியும். ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் சில முக்கியஸ்தர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் அதில் எந்த வித மாற்றமும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

**பொதுத் தேர்தலின்..**

பிட்டுள்ளார்.

விருப்புவாக்குகளை இல்லாமல் செய்வதற்கு யோசனை முன்வைக்கப்பட்டது.

ஜனாதிபதி இதனை முன்வைத்தார் இதன்போது அனைத்து கட்சிகளும் தங்களின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தின.

இதன் அடிப்படையில் தேர்தலின் பின்னர் அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளும் வகையிலான தேர்தல் திருத்தச் சட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

**கூட்டமைப்பு.....**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளுக்கு இடையில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக இன்னமும் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.

ஆனால் எல்லாக் கட்சிகளும் ஒரே அணியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற குடையின் கீழ் போட்டியிடும். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அழைப்பு

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை கண்காணிக்க, வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், குறைந்தது 50 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை இம்முறை தேர்தலுக்காக அழைக்க எதிர்பார்த்துள்ளதாக தேர்தலுக்கான பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

தாய்லாந்தின் சுதந்திரமான தேர்தலுக்கான ஆசிய வலையமைப்பு, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய அமைப்புக்களில் இருந்து தேர்தல் கண்காணிப்பாளர்களை அழைக்கவுள்ளதாக, பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

# ஆரம்ப பிள்ளைப்பருவ பராமரிப்பு கடனுதவி அளிக்கிறது உலக வங்கி

(கொழும்பு)

உலக வங்கியின் நிதிச் சபை இலங்கையில் ஆரம்ப பிள்ளைப் பருவ பராமரிப்பு மற்றும் அபிவிருத்திக்கான தேசிய திட்டத்திற்கு ஆதரவளிக்க 50 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் அளிக்க ஒப்புதல் அளித்திருக்கிறது என்று உலக வங்கி அறிவித்துள்ளது.

உலக வங்கி ஊடகங்களுக்கு வெளியிட்ட செய்திக் குறிப்பில் இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி சேவைகள் சமத்துவமான அணுகல், பின்தங்கிய குழந்தைகளுக்கு திறனை அதிகரித்து கற்றல் வாய்ப்புகளை பயனுள்ளதாக அதிகரிப்பதற்கும் உலக வங்கி 50 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்க ஒப்புதலளித்துள்ளது.

நீண்டகால உலக பொருளாதாரத்தில் மேலும் போட்டித் தன்மை பெற்று இலங்கையில் மனித மூலதன வளர்ச்சிக்குப் பங்களிக்கும் நோக்குடன் இந்த கடனுதவித் திட்டம் வழங்கப்படுவதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

நாட்டின் நீண்ட கால வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கும், மனித மூலதன உருவாக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் இந்த ஆதரவு உதவித் திட்டம் அமைந்திருப்பதாக உலக வங்கி மேலும் கூறியுள்ளது.

# கட்சிகளின் செயலர்களை அழைக்கிறார் மகிந்த

(கொழும்பு)



யூலை மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள விசேட கலந்துரையாடலில் அனைத்துக் கட்சிகளின் செயலாளர்களையும் கலந்துகொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வார காலத்துக்குள், தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா? என்பது தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகள், தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும்.

அதேபோன்று, கட்சிகளின் தற்போதைய சின்னங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதாயின் அதனையும், அந்த ஒரு வார காலத்துக்குள்ளேயே மேற்கொள்ளவேண்டும்.

இந்த விடயங்கள் தொடர்பிலும் மேலும் சில விடயங்கள் குறித்தும், மேற்படி கலந்துரையாடலின் போது ஆலோசிக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுத் தேர்தலுக்கான சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 13 ஆம் திகதிவரை கட்டுப்பணம் செலுத்தமுடியும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.க.விற்கு எதிரான கொள்கை தொடர்ந்தும் கடைப்பிடிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்புக் கொள்கையே எமது கொள்கை என முன்னாள் பிரதமர் ரட்னசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பண்டாரகம பிரதேசத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதியநிதிகள் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.அங்கு தொடர்ந்து பேசிய அவர்,

நாம் அன்றும் இன்றும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான கொள்கைகளையே பின்பற்றுகின்றோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றி பெறச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கமொன்றை அமைக்கும் நோக்கில் இந்தக்கூட்டம் நடைபெற்றுள்ளது.

பந்துல குணவர்தன, குமார வெல்கம, அனுர பிரியதர்சன யாப்பா, டிலான் பெரேரா உள்ளிட்ட பலரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

# கட்சியை விட்டு சென்றவர்களை மீள இணைக்கும் உத்தேசமில்லை

## லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)



ஐக்கிய தேசியக் கட்சியை விட்டுச் சென்ற நபர்களை மீண்டும் கட்சியில் இணைத்துக் கொள்ளவில்லை என அக்கட்சியின் உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டி பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் தனிப்பட்ட சுயநலன்களுக்காக பலர் கட்சியை விட்டுச் சென்று விட்டார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பலர் தற்போது வரையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக எதிர்வரும் பொது தேர்தலில்,போட்டியிடுவதற்கு கோரிக்கை முன்வைத்துள்ளார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் எதிர்வரும் நாட்களில் கட்சியை விட்டுச் சென்றவர்களை மீண்டும் கட்சியில் இணைத்துக் கொள்ளப்போவதில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.நா. அறிக்கைக்கு பின்பே உள்நாட்டு விசாரணை

(கொழும்பு)

போரின் போது நடந்த மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் நடத்திய விசாரணைகள் தொடர்பான அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கையில் கிடைக்கும் வரை, உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்படாது என்று கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

வரும் செப்ரெம்பர் 14 ஆம் திகதி தொடக்கம், ஒக்ரோபர் 2 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30 ஆவது கூட்டத் தொடரில் இந்த விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதற்கு முன்னதாக, ஜனாதிபதி கையில், ஆகஸ்ட் 21 ஆம் திகதி அந்த அறிக்கையின் பிரதி ஒன்று கிடைக்கும்.

அதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், அறிக்கையின் பிரதி கையில் கிடைக்கும் வரையில், உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்படாது.

அதேவேளை, வரும் ஆகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், தெரிவு செய்யப்படும் புதிய அரசாங்கம், ஐ.நா விசாரணை அறிக்கையுடன் எவ்வாறு இணங்கிச் செயற்படுவது என்பது குறித்த விடயத்துக்கே முன்னுரிமை கொடுத்து செயற்பட வேண்டியிருக்கும் என்றும், கொழும்பு ஆங்கில வாரஇதழ் தெரிவித்துள்ளது.

# பிரதமர் வேட்பாளர் நியமனம் காலக்கெடு விதிக்கும் மகிந்த

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதமர் வேட்பாளராக தன்னுடைய பெயரை எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்குள் முன்மொழியாவிட்டால் அது குறித்து தான் அன்றைய தினம் பார்த்துக்கொள்வதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டி ஸ்ரீதலதா மாளிகையில் நேற்று வழிபாட்டில் ஈடுபட்ட மகிந்த ராஜபக்ஷ, அதன்பின்னர், ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

மகிந்தவுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இம்முறை அக்கட்சியின் சார்பில் வேட்புமனு வழங்கப்படப்போவதில்லை என்ற வதந்தி நிலவுவது தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது பதிலளித்த மகிந்த, அது தொடர்பில் இனிவரும் நாட்களில் பார்த்துக் கொள்வோம் என்றார்.

# சுதந்திரக் கட்சி வெற்றிபெற அமைதியாக வேண்டும் மகிந்த

## கூறுகிறார் அர்ஜுன ரணதுங்க

(கொழும்பு)



எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றி பெறச் செய்ய வேண்டுமானால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைதி யாக வேண்டும் என முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அத்தகல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பார்க்கும் போது பிளவடைந்து காணப்படுகின்றது. அதற்கு பிரதான காரணம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகளாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றி பெறச் செய்து விட்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிகாரத்தை கொடுக்க வேண்டிய அவசியம் அவருக்கு காணப்படுகின்றது.

அவர் கட்சியை விட்டு விலகி தனியாக போட்டியிட்டாலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பிளவடையும். மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீது அன்பு வைத்திருக்கின்றார் என்றால் சில காலங்களுக்கு கட்சியை விட்டு ஒதுங்கி, அமைதியாக இருக்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வெற்றிலைச் சின்னத்தில்

# பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவார் மகிந்த

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராக போட்டியிடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிடவுள்ளதாக முன்னாள் அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார். மகிந்த பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவது உறுதியெனவும், இதில் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உள்ளிட்ட கட்சிகள் இந்த விடயத்தில் இணைந்து செயற்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஹெல உறுமயவை அழைக்கும் மகிந்த

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜாதிக ஹெல உறுமயவுக்கு அழைப்பு விடுத்துள்ளார். எதிர்வரும் பொதுத் தேர்தலில் தம்முடன் இணைந்து பணியாற்ற வருமாறு மகிந்த அணி சார்பாக இவ் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை என ஹெல உறுமயவின் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அர்ப்புதன் அச்சகத்தில் 2015 யூன் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.